
"இருப்பது ஒன்றே"!
"நடப்பது நலமே"!
II
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# "இருப்பது ஒன்றே!
# "நடப்பது நலமே!


இதழ் இரண்டு. II

# பொருளடக்கம்


1. பர உணர்வு------------------------------------------------------80

2. உதகையில் நடந்த ஓர் சம்பவம்-------------------------------151


எல்லாம் நீ!




"ஸ்ரீஸத்குரு திருவடி துணை"! "நம்பினோர் கெடுவதில்லை"!
"தெய்வம் மனுஷ்யாணாம்"! "யத்பாவம் தத்பவதி"!
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம், ஓம்"!
"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்"!
ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை!

ஓம் ஆத்மானந்த, பரிபூரண குழந்தைகளே!
அடங்கி வாழ்தலினால், உங்கள் சாதனை, முற்றும் பெற்று, ஜீவன் முக்தி பெறுவீர்கள் என்றும், பெற்று விட்டீர்கள் என்றும்; ஆசிகூறி, வாழ்த்துகிறோம்!
உங்களுக்கு மற்றவை சக்தியும், தற்காப்பு சக்தியும் வேண்டாம் என்றும், தற்கவன சக்தி வேண்டும் என்றும், உங்கள் அனைவரின், திருப்பாதம் பற்றி வேண்டிக் கொள்கிறோம்! பணிவே பாதையாக கொண்டால், அனைத்தும் சித்திக்கும், என உணருங்கள். அதற்கு, பொறுமையே, உங்கள் நண்பனாகும். [illegible]



# உ



27 யாம் காலாதீத, பிரம்மமே யன்றி, சம்சாரி என்ற, குடும்பி அல்ல.
இந்த எண்ணத்தை, "அறிவு" மயமாக்கு.
அவ்வறிவு, பேரறிவாக மாற வேண்டும்!
அப்பேரறிவே, "அகண்ட பாவனை"!
அப்பேரறிவாக, இருந்து கொண்டே, அகண்டைக ரஸமாகிய, பிரம்மானந்த சமுத்திரத்தில், இரண்டற கலந்து, மயமாகி இருக்கும் "உப்பை" போல, மயமாகி இருப்பாயாக. இதுவே!
ஓர் "ஞானியின்" ( அகண்ட பாவனையான் இருப்பிடம் ஆகும்! அகண்டைக ரஸத்தில் மறைவிடமும் ஆகும்!

---

நாம ரூபமாக தானே தோன்றும்; தோளாதே என்றும், பரமாகிய மண்ணாகவும்! மண்ணாகிய பரமாகவும்! பார்க்கேன், எனச் சொல்வதெல்லாம்?
நாமரூபமாக, கண்டாலோ, கேட்டாலோ, குணதோஷம் பின்னவிட்டு, வினையும், ஜனனமரணமும், உண்டாகிறதென்ற, கருத்தில் கொண்டு தான்; பரமும் செயலற்றது! என்றும், மண்ணுடன் ஜலம் (மாயா) சேர்ந்தால், செயல்படும் என்றும் கருத்தில், கொண்டு தான், நாமரூபம் வேண்டாம் என்றும்; மண் ஒன்றே போதும் என்றும், ஸ்ரீ மஹான்களின், அனுபவம் இருக்கிறது!



(81)

சமுத்திரத்தில் எப்படி **உப்பு** தோன்றுவதில்லையோ, எப்படி **சுவை** மட்டும் தோன்றுமோ, அப்படி ஜீவன் முக்தி நிலையும் ஆகும்!

ஓர் சாதகன், எந்த நிலையிலும் **நான்** ஒரு ஆண்! ஒரு பெண்! சம்சாரி என்ற குடும்பி! பந்தப்பட்ட **ஜீவன்** என தன்னைப் பந்தப் படுத்தவே கூடாது.

இங்கு உன் எண்ணமே பாவனை நாமம்/ உன் எண்ணமே வாழ்க்கை! எண்ணமே வினை! யத்பாவம் தத்பவதி! என அறிவோம்! **நாம்** ஸ்ரீ பகவானின் குழந்தை என ஆரம்ப பாவனை இருக்கவாம். அப்பாவனையின் முடிவே உனக்கே அவசியம் தெரியும். அந்த நிலையில், நாம் அந்த ஒன்றே! அந்த ஒன்றே நாம்! என்ற **பர** பாவனையால், உன்னை அதீதம் ஆக்கிக் கொள்.

நாம் ஸ்ரீ பகவானின் குழந்தையே என உன்னைப் பாவனை செய்யும் போது, நீ அறிவாக பிரகாசிப்பாய்! நாம் அதுவே, என பாவனை பண்ணும் போது நீயே பேரறிவாக பிரகாசிப்பாய். இப்பர பாவனையாகிய, அகண்டாண்ம சொரூபமே, அகண்டாகாரத்தை **சுவைக்க** முடியுமே அல்லாது, வேறெந்த பாவனையும், அகண்டாகாரத்தை சுவைக்க முடியாது. சமுத்திரத்தில் எப்படி **தோன்றுவதில்லையோ** எப்படி ஆனால் **சுவையாக** இருக்குமோ.



உ




அதுவே ஜீவன் முக்தியாகும். ஆகவே தான், எம் ரிபு மஹாத்மா! அந்த வார்த்தையை போட்டார்:-

அதாவது:- அந்தம் இல்லா, அகண்ட பரப்பிரம்மத்தின் கண், (அகண்டைகரஸ சமுத்திரத்தில்) "ஐக்கியமே" (கரைந்து கலந்து மயமாகி) அடைந்த, மனோ விருத்திகளை (மனோவிருத்தி கலந்து கரைந்த நிலைகளை) எம் மைந்தா! "அகண்டாகார விருத்தி" (பரப்பிரம்மானந்த நிலை) என்று, மாசு மறுவற்ற ஞானிகள் மதிக்கவாகும் என்றார். அந்நிலையில்தான் செயல்படாத/ செயல்பட முடியாத/ பரமாகிய மனமே! மனமாகிய பரமே! என உணர்வு பூர்வமாக, உணர்ந்தால், அங்கு, இருப்பது ஒன்றே! நடப்பது/நலமே! எனமுடியும்.

(28) (A) தாவரத்தையும் தாவர உண்மைகளையும்; நான்! என்னுடையது எனபாவனை செய்வது, துவைத விருத்தி!

(B) அனைத்து தாவரங்களும், அனைத்து பொருள்களையும் நாம் என்றும்; எம்முடையது என்றும் பாவனை செய்வது, சாட்சி விருத்தி!




(83)

(உ) அனைத்து ஜீவன்களும், அனைத்து பொருள்களும், அனைத்து ஜட கட படா கிரியையும், பரமாகிய மண்ணை என்றும், மண்ணாகிய பரமே என்றும், ஐக்கியப்படுத்துவது, அகண்ட விருத்தி!

(A) அஹங்கார, மமகாரத்தோடு, உரிமையும் உடைமையும் பாராட்டி, சொந்த பந்த பாசத்தோடு விகாரமும், விவகாரமும், (குணதோஷ பிரச்சனைகள் அடைவது) ஜீவ விருத்தியாகும். இது "மனைமை" பாவனையாகும்!

(B) சர்வார்ப்பண நிலையில் (எல்லாம் நீயே என்றும், உன்னால் என்றும், உன்னுடையது என்றும்) பாவனை செய்து, அன்பு, கருணை, பொறுமை, பணிவு, நாவடக்கம் எல்லாம் நவமே என ஏற்று ஸ்ரீபகவத் சொரூபத்தில் ஒன்றுவது (தெய்வகுணமான, ஏகதுணையாக இருப்பது) சாட்சி விருத்தியாகும்! இது "அறிவு" சொரூபமாகும்.

(உ) பிரம்மார்ப்பண நிலையில் (எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே! யாமே அது!) பாவனை செய்து கண் இருந்தும் குருடாய்! காது இருந்தும் செவிடாய்!



(84)

வாய் இருந்தும், ஊமையாய்! நாவு அடக்கமாய்

எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே!
என பர உணர்வோடு, அகண்டாண்ம பாவனையோடு,

இருப்பது, அகண்டாகார விருத்தி என்ற,
சர்வ சாட்சி நிலையாகுமே!

இம் மூன்று விருத்திகளுள், தூல விருத்தியையும், சாட்சி விருத்தியையும், நீக்கி விட்டு, ஓர் ஆத்ம சாதகன், அகண்ட விருத்தியில், நிரந்தரமாய், இருக்கலாம்! நிலைகண்டு, சாட்சி விருத்தியில் வந்து வந்து போகலாம்! ஆனால் தூலவிருத்தி கூடாது இவன் அகண்ட விருத்தியில், சர்வசதா இருப்பதால் எல்லாம் மண்ணாகிய பரமே என்றும், பரமாகிய மண்ணே என்றும் உண்மை உணர்வோடு இருப்பதால் இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! எனசுகமாக இருக்கமுடியும்!

29 A சிரவணம் பொருந்த செய்!

B மனனம் வருந்தி செய்!


C நிதித்தியாசம் விரிந்து செய்!



உ



(A) பேதா பேதம் நீக்கி! குற்றம் குறை நீக்கி!
விருப்பு வெறுப்பு நீக்கி! இவை அனைத்திற்கும்,
மூலம் "மனமே"! அம்மனதுக்கு
அன்னியமாய், எவையும் இல்லை என்று, பர உணர்
வோடு, அனைத்தையும், "பொருந்து"
சிரவணம் ஆகும்! இதனை, அசம்பாவிதம் செய்வது
(B) மேலே சொன்ன நிலையில், நீளப்படி சாதனை செய்தல் நாசமாகும்!
கலியுக, பழக்க வழக்க, தோஷமானது, ஆம்
சாமான்யமாக போகாது தான். இங்கு ஸ்ரீபகவான்
கிருபையை, பெற்றவன்றி, இது சாத்தியமாகாதே.
ஆகவே, வருந்தி செய்ய வேண்டும் என்று எண்ணியும்!
இங்கு ஸ்ரீபகவானிடம், நம் கண்ணீரை காணிக்கை
யாக, கொடுத்தாலன்றி, இது சாத்தியமாகாது!
இங்கு கண்ணீரை, காணிக்கையாக கொடுத்து,
நம் காரியத்தை சாதிக்கலாம்! ஆகவே, இது
வருத்திச் செய்யும், நிலை என்று, ஸ்ரீமகான்கள்
சொல்வர். இதனை சந்தேகம் நாசமாகும்! மனம்
நைந்து "வருந்துவதே" மனனம் ஆகும்!



(86)

உ முன் சொன்ன நிலையில், மனம் கரைந்து, மனம் வருந்தி, செய்யும் போது. தளிப்பதும்! தவிப்பதும்! ஒன்றும் இயலாத, சூழ் நிலையும். ஏற்பட்டு, ஏமாற்றமும்! தடுமாற்றமும்! இவ **விடைகள்** தோன்றும். அது கண்டு மனம், ஓர் ஆட்டம் காணும் அடுத்த வினாடி, எல்லாம் நீயே! என்ற சர்வார்ப்பணமும். எல்லாம் ஒன்றே! என்ற பிரம்மார்ப்பணமும். இணைந்த தன்மையில், இது எல்லா வற்றையும் ஒன்று படுத்தும் நிலையில், "**விரிவடையும்!**" இதுவே நிச்சியமானால் இதனை விபரீத மாவினை, நாசமாகும்! நாமரூபம் அழிந்தும், நாசமானால் பேறு. ஸ்வயஞானுபவத்தில், எல்லாம் மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே! என்பது சத்தியமாகவும்! சாஸ்வதமாகவும்! இயல்பாகவும் அனுபவத்தில் முடிவும் அங்கு, இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! எனப்பிரகாசிக்கும்.





(30)

(1) உபதேச வாக்கியம் "தத் த்வம் அஸி"

(2) அனுபவ வாக்கியம் "அகம் பிரம்மாஸ்மி"

(3) மனனவாக்கியம் பிரக்ஞானம் பிரம்மம்


(4) ஞான சபையில், சிஷ்யனுடைய ஸ்வய அனுபவ வாக்கியம் அயமாத்மா பிரம்மம்

உத்தம அதிகாரிக்கு, நிலைகண்டு, அவனுடைய ஸ்ரீஸத்குரு அருளும் உபதேச வாக்கியமாவது

தத் த்வம் அஸி:- அதுவாகவே நீ இருக்கிறாய். என்றார்!


சிஷ்யன்:- யாம் அது என்றால், எம் அனுபவம், எப்படி இருக்க வேண்டும்?

குரு:- "அகம் பிரம்மாஸ்மி" என்ற மஹாவாக்கியப்படி, அதுவே நாம், நாமே அது, என அனுபவத்தை பெருக்குவாயாக!






சிஷ்யன் :- குருதேவா! அவ்வனுபவம்,
பெறுவதற்கு, யாம் என்ன செய்ய வேண்டும்?
குரு :- குழந்தாய்! அவ்வனுபவம் பெறுவத
ற்கு, நாம ரூப, உடல் உலக, உணர்
ச்சிகளை! முழுமையாக நாசம் செய்வா
யாக! தெய்வப் பிரக்ஞையோடு இருப்பாயாக!
அவ்வனுபவ முடிவில், ஆத்மப்பிரக்ஞை
யோடு இரு! பரமாத்மப் பிரக்ஞையோடு
இரு! பரப்பிரம்மப் பிரக்ஞையோடு
இரு! பிரக்ஞை என்பது உணர்வு ஆகும்
இதுவே பிரக்ஞானம் பிரம்மம்!
ஆகும் என்றார்.
அவ்வுத்தமமாணவனும், ஸ்ரீ ஸத்குரு வாக்
குப்படி, அவர் வாக்கில், நம்பிக்கையும், தம்
லக்ஷியத்தில், வைராக்கியமும் கொ
ண்டு, பூரணத்துவம் பெற்றான். அவன் ஜீவன்
முக்தியை, இயல்பாக, சுகமாக, அதிசுலப
மாக, பெற்ற தன்மையினால், அவனுடைய,



ஸ்வய அநுபவ நிலையில், ஸத்திய
வாக்காக, ஞானசபையின் அதிகாரியா
"அயமாத்மா ப்ரம்மம்"! கிட
என்ற "யாம் அதுவாகவே" இருக்கி
என மஹா மௌனமாகுன்! றோம்

இவ்வனுபவம், எப்படி பெறமுடியும் என்றால்?
நாமரூப, ஜக ஜீவ, ஸ்வரூபமும், அனைத்துமே
"மண்"! என்ற, உறுதி நிச்சயம் வேண்டும். பின்
பரமாகிய மண்ணே என்றும், மண்ணாகிய பரமே
என, ஸ்வயமாகவே, உணர்வை பெற்றுவிட்டால்,
இருப்பது ஒன்றே என்றும், நடப்பது நவமே என்றும்
சும்மாவே, சுகமாக, அதிசுலபமாக, இருக்கலாம்!

(3) பேதமற உணர்வொருமை உணர்!
போதமற சாதகமாய் நிதித்தியாசம் செய்!
வேதகமான நால்கரீக்கள்!
அனுபவம் தாமே பெருகும்!



90

**A** அதிகம் பேசாதே! **B** அதிகம் { படிக்காதே! / கேட்காதே!


**உ** ஒருவார்த்தைக்கு, பலபல அர்த்தம் பிரிக்காதே!

---

நாமரூப, ஜக ஜீவ, சொரூப இருப்பே, விகார குண தோஷம்! அதனை பேத உணர்ச்சி! அதனை விவகாரம் (பிரச்சனை) இவைகளே, "உலகம் ஒன்று இருக்கிறது; என்ற **பொய்யானதாகவும்** இப்பேதம் அறுபடுவதற்கு?

**1** காலாதீத அந்த ஒன்றே, திரிகர்த்தாக்களாகவும், மாயாவாகவும்! இருந்து நாமரூப, உலகை உண்டு பண்ணி. அதுவே, ஜீவ சொரூபங்களாக, இருந்து "மாயா **மனதை**" வைத்து காரசார விளையாட்டிற்காக "**பேத**" குணங்களை, கற்பிதம் பண்ணி, விளையாடிக் கொண்டிருக்கிறது, என உணர்ந்தால் போதும். இதன் உண்மை, எப்படி இருக்கிறது என்றால்?

**மண்** ஆசைப்பட்டேனே, **மண்** உண்டு போட்டதடா! என்ற நிலையில்; மண்ணுக்கு, அன்னியம் எவையுமில்லை என்ற, திட உணர்வுடன், இருந்தால், மனம் திருமாறுது! மனம் திருந்துது! மனம் பாதை மாறுது! அங்கு பேதம் ஓடுது!



௧


௨ போதமுற என்றால், பாடம் படிப்பு வேண்டாம் என்றும்,
அனுபவம் வேண்டும் என்றும், பொருள் வரும்!
ஆகவேதான் ஓர் இடத்தில், எம் ஸ்ரீ மஹாத்மா சொல்லும் போது,
“ஸ்ரீ தற்போதம்” சூனியம் என்ற நிலையால் {பாடம் படிப்பு} முடிவு பெற வேண்டும் என்றும்,
“ஸ்ரீ தற்பதம்” ஸ்ரீ பரமாத்ம சொரூபம் நிலை பெற்று, ஸ்ரீ பரமாத்மா நாம், ஆக வேண்டும் என்றும்,
ஆகவே இந்த, தற்போதமுற {ஸ்ரீ பரமாத்மா நாம் ஆகும் நிலைக்கு} நிதித்தியாசம் (அனுபவம்) வேண்டும் என்றார்.
இங்கு ஓர் முக்கியம் என்ன வென்றால்?
“ஸ்ரீ பேதம்” அறுபடவும், “ஸ்ரீ தற்பதம்” நிலை பெறவும்,
வேண்டுமானால், அவசியமாய்! கண்டிப்பாய்!
பிரமாணமாய், உறுதியாக சொல்கிறேன் ????????

௩ “வேதகமான” நூல்களை தள்ளிவிடு.
அதாவது உன் மனம், ஒப்புடைய நூல் பற்றிப் படிக்கும்
வரை, அத்வைதத்தை “ஸ்ரீ மட்டும்” உரைக்கும் பலபல
நூல்களை பார். அது அவசியம் தேவை! “ஆமா?”



அங்கு நீ இருக்க (ஒரு) முடியாது என்றும், இயலாது என்றும் கூறுவது உன் அஹங்காரம்! மமகாரம்! இருக்க முடியாது இருக்க இயலாது என்று பொருள்படும்.

ஸ்ரீபகவான் கருணையினாலும், உன் ஸ்ரீ ஸத்குரு கிருபையினாலும், உன் மனம், அனுபவம் பெறும் நிலையில், ஓர் "நூல்" உன் உள்ளத்தில் புகுந்துவிடும். இது பரமான உண்மையாகும்! அந்த நூல் மட்டும், திரும்ப, திரும்ப, திரும்ப திரும்ப திரும்ப, திரும்ப திரும்ப "உள் ஆழ்ந்துசெல்"! அங்கு, அவசியம், நீ வெளியே வரமுடியாது! வெளியே வர இயலாது!! அங்கு நீ இருக்கமுடியாது! அங்கு நீ இருக்க இயலாது!! அங்கு நீ அதுவாகவே இருப்பாய்! அங்கு அதுவாகவே நீ இருப்பாய்! இது ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்! அனுபவம் பெறும் நிலையில், அதே அத்வைதம் உணர்த்தும் சமமான "வேறான" நூல் பார்த்தாலோ, கேட்டாலோ, படித்தாலோ, உன் அனுபவம் "சிதறடிக்கப்படும்" இது உறுதி! அங்கு உன் ஸ்ரீ பகவானும் பொறுப்பல்ல உன் ஸத்குருவும் பொறுப்பல்ல! உன் அதிகப் பிரசங்கித்தனமான, "அஹங்கார" மனமே காரணமாகும். இது இக் கலிதோஷ மஹிமையாகும்!




(93)

இங்கு பாதகமான நூல், என்று எதைக் குறிப்பிடு கிறார் என்றால்? பற்பல நூலைப் பார்க்கும் போது, அத்வைத நூல், பற்பல இருந்தாலும், உன் மனம் ஒன்றுதான். இங்கு உன் மனம், மிரட்சியானால் இவரா? அவரா? இதுவா? அதுவா? இது சரியா? அது சரியா? என்ற நிலையில் "குழப்பத்தால்" (சீராக செல்லும் பாதை, தடுக்கப்பட்டு மாற்றம் உண்டாவதால் அதனால் மாற்றமும் உண்டாகும்.) "காலம்" விரயமாகும்! அங்கு வந்ததை மறந்த நிலையில் தூரம் விழுந்து விடும்! கணக்கு முடிக்காத தூரம் (வேறு) திரும்பவும், எழுந்தே ஆகவேண்டும்! இது அனுபவ ஸ்ரீ மஹான்களின் வாக்காகும்!

இதற்காகவே, அடுத்த வரியில் சொல்கிறார்?

(A) அதிகம் பேசாதே:— அதிகம் பேசுவதால் வாக்கு விரயம்! உன் சக்தி விரயம்! நீயும் களைத்தே வருவாய். அவனும் களைத்தே போவான்!

(B) அதிகம் படிக்காதே! அதிகம் கேட்காதே:— மனம் ஓர் நிலைப் படாது. "சந்தேகம்" தீராது! சஞ்சலம் ஓயாது! அனுபவம் பெற முடியாது! ஆனால் ஓர் பண்டிதனாகவோ! வித்வானாகவோ! ஆகலாம்! ஜீவன் முக்தி பெற முடியாது! ஆனால் பேர், புகழ், பட்டம், பதவி பெறலாம்! அங்கு உன்னை இழந்து விடுவாய்.



(௧௪)

உ ஒரு வார்த்தைக்கு, பலபல அர்த்தம் பிரிக்காதே!
இங்கும் அனுபவம் பெற முடியாது! அர்த்தம், அனர்த்தம்
ஆகும்! பலபல, கோர குணங்களும், பெற வாய்ப்பு உண்டு.
பிடிவாத! தர்க்க! குதர்க்க! சாஸ்திர பண்டிதன்
ஆகலாம். அனுபவ ஆத்ம ஞானம் பெற முடியாது!
ஊர் உலகம் புகழும்! உன்னை இழந்து விடுவாய்!
ஆகவே, ஒன்றைப் பற்றி, ஒரகத்திரு! என்ற நிலையில்,
எல்லாவற்றையும், "நாம ரூபத்தை"
தள்ளி விட்டு. அனைத்தும் மண்ணே என்றும்,
அன்னியமாய், எவையும் இல்லையென்றும், மண்ணுக்கு
ஒழித்து, சந்தேக கலக்க பயம் இன்றி, மயக்கம்
ஒன்றே! நடப்பது நலமே! என நலம் பெறுவாயாக!

## (௩௨) ஸத், ஸித், ஆனந்தம்!

ஓர் சிறிய விளக்கம்!

இதற்கு ஒரே, வாக்கியத்தால், விளக்குவது என்றால்?
"ஸத்தாகிய" அந்த ஒன்றே. விளையாடும் நிமித்தமாக,
"ஸித்தாக" வடிவெடுத்து, நாமரூபங்களை, சிருஷ்டித்து
மனவழியால், அஹங்காரத்தை, தோற்றுவித்துக்
கொண்டு,





காரசாரமாக, விளையாடும் நிலையில், இன்பம்! துன்பம்! என்றும்; அமைதியாக, விளையாடும் நிலையில், ஆனந்தம் என்றும், நமக்குத்தானே, விளையாடிக் கொண்டிருக்கிறதென்று, ஞானிகள் சொல்வர். இங்கு நான்! எனது! என்றால், இன்பதுன்பம் என்றும், எல்லாம் நீயே! உனது! என்றால் அது "**ஆனந்தம்**"! என்றும், பொருள் கொள்ளலாம்!

இங்கு "**மனதை**" வைத்து, கணக்குப்பார்த்தால், கோர குணங்களால், இன்பதுன்பம் தோன்றும்! அதனால் புண்ணிய பாபமும்! அதனால் ஜனனமரணமும்! உண்டாகி, கணக்கு தொடரும்!

இங்கு "**அறிவை**" வைத்து கணக்குப்பார்த்தால், "**ஸத்வ**" குணம் (அன்பு, கருணை, பணிவு, கனிவு, பொறுமை, இறை குருநாமாவளி, நம்பிக்கை! வைராக்கியம்) மட்டும், பிரகாசிப்பதால், ஸத்தியதர்மத்துடன் உயர்பிறவியோ, பரமுக்தியோ, சாத்தியமாகும்! இதில் முந்தையது இன்பம் என்றும், பிந்தியது ஆனந்தம் என்றும், சொல்வர். இவ்விரண்டிற்கும், ஜனனமரணம் உண்டு!



(96)


இங்கு "பேரறிவை" வைத்து கணக்குபார்த்தால்,
இது "நிர்க்குணமாகும்"! இங்கு எந்த
விளக்கமும், காணவும் முடியாது! சொல்லவும் முடியாது!
இதுவே இது, அகண்டபாவனை என்று, சர்வசாட்சி விருத்தி
ஆகும். இங்கு, எந்த விளையாட்டும் இல்லை! இருக்கவும்
முடியாது! இருக்கவும் இயலாது! ஏகாந்தமாக,
தனித்த நிலையாகும்! இங்கு எல்லாம் மண்ணே என்றும்,
மண்ணுக்கு, அன்னியம் எதுவும் இல்லை என்றும்,
அனைத்தும், பரமாகிய மண்ணே என்றும், மண்ணாகிய பரமே
என்றும், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்று,
சும்மா சுகமாக இருக்கும், நிலையாகும்.

(33) அறிவு அற்றோர்க்கு, நாமமே உலகம் தோன்றும்!
அறிவு உற்றோர்க்கு பரமாகத் தோற்றும்!!
அறிவற்ற நிலை, "மனே" வடிவம்!
அறிவுற்ற நிலை, "அறிவு" வடிவம்!
இவ்விரண்டும், அற்ற நிலை, "பேரறிவு" ஆகும்!




(97)

அறிவற்ற நிலையில், மனம் பற்பல கற்பனைகள்,
பண்ணிப் பண்ணி, விகாரமும், விவகாரமும்,
அடைவதால், நாமரூப "போராட்டம்"
தொடர்ந்து நடைபெறும்!
இந்த நாமரூப போராட்டம் எனச் சொல்வதெல்லாம்,
"மண் பொம்மை" விளையாட்டே!
அப்பொம்மைகள், தாமே வந்து ஆடாது! ஆடமுடியாது!
ஆடஇயலாது! அப்பொம்மைகளின், சூத்திரக் கயிறு,
"மனம்" ஆகும்! அக்கயிறும், தாமே இயங்கி, அப்பொம்
மைகளை, ஆட்டமுடியாது! ஆட்டஇயலாது!
அச்சூத்திரக்கயிற்றை, வைத்து ஆட்டுபவருக்கு, ஓர்
"சூத்திரதாரி" இருக்கிறான்! அவனே ஸ்ரீபகவான்.
ஆகவேதான், ஓர் அன்பர் பாடல் போலு:—
நன்றாய், செய்த சூத்திரப் பாவை! என்றும்,
நன்றார், தம்பிறவி, அது தன்றலே வந்து
ஆடிக்களிக்குமோ? என்றும் அச்சூத்திர பாவை,
தம் கயிறு, இற்றுப் போகுமுன் "சூட்சமக்"
கயிற்றினைப் பார்! என்றார்.



இங்கு, இட்டுச்சீ கயிறு என்பது, ஸ்ரீ பகவான் அருளே!
இவர் **சர்வார்ப்பணத்தையே**
சுட்டிக் காட்டுகிறார் என உணர வேண்டும்! இங்கு,
மறை வடிவத்தை, முழுமையாக கெடுத்து விட்டு,
அறிவு வடிவத்தை, ஏற்றுக் கொள் என்கிறார்!
உன் அனுபவத்தை, வைத்து அவ்வறிவு வடிவத்தையும்,
பேரறிவாக, மாற்றிவிடு என்றும். அதிரகஸ்யமாக
சொல்கிறார். பேரறிவே **பிரம்மார்ப்பணம்**
ஆம். இதன் உண்மை, எப்படி விளக்கப்படுகிறது என்றால்?
மனமாக, இருக்கும் போது, நாமரூப களியாட்டம்,
இன்பதுன்பமாக தோன்றும்.
அறிவாக இருக்கும் போது, நாமரூப பொம்மலாட்டம்
ஆனந்தமாக தோன்றும்!
பேரறிவாக இருக்கும் போது, "**அசைவற்ற**"
மண்பதுமைகளாகவும். அதுவே மண்ணாகவும் தோன்றும்.
ஆகவே மண்ணாகிய பரமே என்றும். பரமாகிய மண்ணே
என்றும் உணரும் போது, இருப்பது ஒன்றே!
நடப்பது நலமே! என உணர்வாய்!






34

வெகுதிடமான! வெகு உறுதியான! அதி வைராக்கியமான! அகண்டாண்ட பாவனையின் நிச்சயம்தான்! குற்றம் குறை! பேதமதி! இவை நீங்குமேயல்லாது, வேறு எந்த வழிமுறையோ, தர்மா உபாசனா முறையோ, குற்றம் குறை! பேதாதிபேதம்! நீங்கவே நீங்காது! இது அனுபவ உண்மையாகும்.

முன் ஜென்ம தொடர்பும்! இச் ஜன்ம வாசனையும்! இணைந்த பசையே, குற்றம் குறையும், பேதமும்! ஆகும். ஓர் பெருங்காய டப்பாவிலிருந்து, அப் பெருங்காயத்தை, தூக்கி தூர எறிந்து விட்டாலும், அப் பெருங்காய "வாசம்" சாமான்யமாகப் போகாது, என்பது உண்மையே! இங்கு இரண்டு நிலைகள், ஸ்ரீ மஹான்கள் சொல்வர்.

(1) பெருங்காயத்தை அகற்றும் நிலை ஒன்று!

(2) பெருங்காய வாசனையை, போக்கும் நிலை ஒன்றுண்டு! முதலில் அப் பெருங்காயத்தை, அகற்றும் நிலை: பெருங்காயம் என்றுவே, "பெரியகாயம்" எனப் பொருள்படும்! இது சொந்த, பந்த, உறவு, நட்பு,



இவைகளிரண்டும் (பெரிய ரணம் ஆகும்), "பவபந்தம்" என்ற தொந்தம் ஆகும்.
பந்தம் = ஒட்டுறவு! தொந்தம் = அதன் தொற்று நோய்!
முதலாவது, எண்ணத்தின் வலிமை! இவ்விரண்டுமே, நான் "ஜீவன்" என்ற அடிப்படையே!
இரண்டாவது, செயலின் வேகம்!!
இதைத் தாக்கி, தூர எறிவது என்றால், நான் ஜீவன் அல்ல!
"யாம்" ஸ்ரீ பகவானின் குழந்தையே!
அதன் வாஸனையை போக்குவது என்றால் எல்லாம் நீயே!
உன்னால்! உன்னுடையதே! என்ற சர்வார்ப்பணம் ஆகும்!
மேலே கூறிய, இவ்விரண்டும், அனுபவ சாத்தியமானால்
விருப்பு வெறுப்பு! குற்றம் குறை! பேத அபேதம்! ஆகிய
இம் மூன்றுமே, இல்லாதொழியும். இது சாத்தியமாவதனால்
இந்நிலையில் இருந்து கொண்டு, பிரம்மார்ப்பணத்தால் ஆகும்.
எல்லாம் ஒன்றே! அது சிவமே! அது யாமே! யாமே அது!
நாமரூப, ஜக ஜீவ, உலக தோற்றம் அனைத்தும், "மண்"
ஆகிவிடும். அந்நிலை, வேறு எந்த "காம" உபாசனையாலும்,
பெற முடியாது. பெற இயலாது! இது வேதசத்தியம்!
இந்நிலையால் அனைத்தும் பரமாகிய மண்ணுக்குள் அன்னியமில்லை
என்றும். மண்ணாகிய பாத்திரத்துக்கு அன்னியமில்லை என்ற நிலையில்
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்பது அதி அவசியமாகும்!

(101)



இ அறிவு
கண்ணால் உணரலாம்!

தேவர்கள் "ஒளிஉடல்"

(ஆ) திரிகர்த்தாக்கள், ஹயன்! ஹரி! ஹரன்!
என்ற சூட்சும நாம ரூபங்களும்! அவர்களின்
சிருஷ்டியாதி, ஏழு உலகங்கள், என்றும்! அவை

(1) பூலோகம்:— மனித இனத்துடன், நடப்பன,
பறப்பன, நீந்துவன, ஊர்வன, முதலிய 84
லக்ஷம், ஜீவ கோடிகளின் "தாஸ்" இருப்பிடம்!

(௨) "சொர்க்கம்":— புண்ணியம் செய்தவர்கள்
மட்டும் வாசம் செய்யும், "சோமபானமுது"
"சூட்சுமபோகபூமி" 33 கோடி தேவர்கள்
இருப்பிடம்! அதிபதி தேவேந்திரன்.

(௩) "கைலாயம்":— ஸ்ரீசிவபெருமானும்,
மற்றும், பூதகணங்களும் & தேவகணங்களும்!
மற்றும், சத்தியம் & தர்மம்! செய்த,
ஸ்ரீமஹான்களும், வாசம் செய்யும், பேரின்ப இருப்பிடம்!
இவர்கள் வடிவம்: "அதிசூட்சுமம்" ஆகும்!
"ஸ்ரீஹரன்" இருப்பிடம்! (இது தர்மம்)



ஸ்ரீ ஹயன்! ஸ்ரீ ஹரி! ஸ்ரீ ஹரன் ஆகிய

மூவரும் அதி சூட்சும ஒளி உடல்! (102)

ஒளி உடலையும்! சூட்சும ஒளி உடலையும் விளக்க வார்த்தைகள் இல்லை! இது ஸ்வய அனுபவமே! இவ்வேழையை மன்னிக்கவும்.

(4) "வைகுண்டம்":- "ஸ்ரீமந் நாராயணன்" மற்றும், தேவ கணங்களும் "சத்தியம் & தர்மம்" செய்த, ஸ்ரீ மஹாத்மாக்கள், வாசம் செய்யும் பேரின்ப இருப்பிடம்! இவர்கள் வடிவம்:- "அதிசூட்சுமம்" ஆகும்! "ஸ்ரீஹரி" இருப்பிடம்! (இது அறிவு)

(5) பிரம்மலோகம்:- "ஸ்ரீ பிரம்ம தேவன் மற்றும், தேவ கணங்களும், மற்றும் "சத்தியம் & தர்மம்" செய்த ஸ்ரீ மஹாத்மாக்களும், வாசம் செய்யும் பேரின்ப இருப்பிடம்! இவர்கள் வடிவம்:- "அதிசூட்சுமம்" ஆகும்! "ஸ்ரீ ஹயன்" இருப்பிடம்! (இது சத்திய வாக்கு)

குறிப்பு:- இவ்விரு மனங்களும், "சயம்" "அழுந்தால்" (கற்பனை அகங்காரம்) அறிவு ஞானம் பிரகாசிக்கும். அதன் மூலம் உணரலாம்!



உ

திரிகர்த்தாக்களும் எந்த விறடியும் தியான பரர்களே! (103)

மும்பெரும்சக்திகளோ திருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் செய்கின்றது. ஆதலின் அதன் பொறுப்பை திரிகர்த்தாக்களும் ஏற்கின்றனர்.

(6) மணிஸ்ரீபம்:— "யோகமாயா மட்டும்" தனித்த இடம்! இங்கு எவரும் இருக்க முடியாது. இருக்க இயலாது! மூலப் பிரகிருதி! அவ்யக்தம்! என வாக்கியார்த்தத்திற்காக உண்மை அறிவ காலாதீத "பர" சொரூபமும் "மாயா" நிலையில் சேர்ந்த "சிருஷ்டியின் ஆரம்பம்"!

(7) "சத்தியலோகம்":— இது "ஞானிகளின்" இருப்பிடம் என்று, "ஜைதக்காக" சொல்லும் இருப்பிடம்! இங்கு பர சொரூபத்திற்கும், ஓர் இடத்தை காட்ட வேணுமென்று, ஸ்ரீமஹான்களால் சொல்லும் ஓர், "உபார" இருப்பிடமும் வாசகமும் இல்லாத இடம் "ஆகும்"!!!



இ "பேரறிவு" (104)

அனைத்திலும், சர்வ வியாபியாய், செய்யாததாய், அருவ், செய்விப்பதாய், சர்வசாட்சியாய், தான் தானே சர்வ வியாபியாய் இருக்கிறது! இதுவே ஞானியின் நிலையாகும்.

எம் ஆனந்தக் குழந்தைகளே! மேலே சொன்ன, ஏழும் "மேலோகங்களும்" ஸப்த லோகம் ஆகும்! என ஸ்ரீ மஹான்கள், வாயிலாக அறிகிறோம்!

இங்கு "மனம்" அறிந்தால் (கற்பனை செய்தால்) பூலோகம்! பித்ருலோகம்! சொர்க்க லோகம்! என்ற "மூன்று" லோகங்களிலும், போக்கு வரவு செய்யலாம்!

இங்கு "அறிவு" உணர்ந்தால் (சூர்ந்த புத்தியினால்) கைலாயம்! வைகுண்டம்! பிரம்ம லோகம்! என்ற, "மூன்று" லோகங்களிலும், போக்குவரவு செய்யலாம்!

மேலே "புண்ணியம்" தேடவேண்டும்! (இங்கு மனம்)

கீழே "சத்தியதர்மம்" தேடவேண்டும்! (இங்கு அறிவு)

இங்கு ஸ்ரீ மஹான்கள் "பித்ருலோகத்தை" ஓர் உலகமாக கொள்ளவில்லை! அது பற்றி பேசவும் காரணம் இல்லை! அது "ஒரு" இடமே! அது சூட்சுமம் இது தூலம் ஆகவே இரண்டும் ஒன்றே!

பூலோகமும்! பித்ருலோகமும் ஒன்றே!



அவைகள் வேண்டாம் என்றால், இல்லை இல்லை யென மறந்து விடுங்கள். இவை மனமும், அறிவும், செய்யும் கற்பனையும் போன்றதும் ஆகும். அவை பிறவியின் வித்து ஆகும். நமக்கு உடல் இருப்பதால், அவைகளையும் உடல் என்று சொல்கிறோம். ஆனால் அவைகள் ஒளிமயமேயாகும்.

இதில் சொல்லிய வாறு, அவர்களின் உவகைகள் சொல்லப் படுகின்றன. இவை அனைத்தும்?

"போக்கு வரவு" வேண்டுமானால்? போக்கு வரவு ஸத்தியமானால்? அவைகளை அனுபவிக்கும் "மனம்" ஸத்தியமானால்? அவைகள் உங்கள், கற்பனை சஞ்சாரத்திற்கு, முக்கியமானால்? அவைகள் "உண்டு" என கொள்ளலாம்.

புண்ணிய பாபமும் இரண்டும் ஒன்றேயாகும்.

ஸத்திய தர்மமும் ஸத்தியம் பேசி அறத தர்மம் செய்யும் நிலையும். முறையே

"ஜீவத்வமும் தெய்வீகமும்"!

இணைந்து ஒன்றாகும்.

இவைகளை அடைய :- தான தர்மம் / தீர்த்தம், மூர்த்தி, ஸ்தலம், யாத்திரை / தேவ தெய்வ வழிபாட்டு முறைகள் / வோகக்ஷேம யாகங்கள் / ஜபதப, சேவைகள் / என இன்னமும் புரிபவ "ஸத்" கர்மாக்கள் உண்டு.

இவை அனைத்தும், ஜீவன் முக்திக்கு "ஒவ்வாது"! ஆகும் என, ஸ்ரீமஹான்கள் சொல்வர். ஆனால் அவை ஜீவன் முக்தியின் அடிப்படைகள் ஆகும்!



மனமே மயக்கத்தால் ஜன்ம வினை வருகிறது!
மனமே மயக்கத்தால், வினைகள் பெருகிறது!
மனமே மயக்கமே காமன் ஆகும்!!

முதல் மூன்று போதகமும், மனம் சம்பந்தம் என்றும்,
பின் மூன்று போதகமும், அறிவு சம்பந்தம் என்றும்,
அனுபவஞானிகள் கூறுவர். கிடைக்காத எம்
திருமூலர்மா, அழகாக இரண்டு வரிகளில் சொன்னார்.
இங்கு இதுவரை கூறிய அனைத்தையும் சேர்த்து,
(மனதைவரத்திட்டிய)
"கவருற்ற மயக்கங்கள் ஒன்றுமே இல்லை" யென அழகாய்
திருத்தமாக சொல்லிவிடும்.

சத்தியம்
காண்கும் இவ்வாறு பிரம்மம் ஒன்றே!

"அது நாம்! நாமே அது!!"

என்று அவமற்ற (கேடில்லாத) உறுதியில்,
அனைத்தையும் தான் ஆவியாக! அதுவாக பிரகாசிப்பர்
என்றார் எம் திருமூலர்! இந்நிலையில், யோகம்.
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என உறுதிகொள்.



36

மந்திரம் தீட்சை, இவை சாமான்ய குருவுடையது.

"அதுவே நீயே அது" தெய்வீக குருவுடையது.

நாமரூப, ஜகஜீவ மற்றும் அனைத்து பொருள்களுக்கும்! ஈஸ்வராதிகளுக்கும்! இருப்பும்! இயக்கமும்!

கொடுக்கக் கூடியது, மந்திர, தந்திர, யந்திரங்களாலும் மன சம்பந்த இவை அனைத்தும், வந்து, இருந்து மாறிமறையக் கூடியதே!

சாஸ்வதமும், நிரந்தரமும் அல்ல! அவை பிறப்பு பிறப்பின், ஓர் அங்கமாகும்! இவைகளை உணர்த்தும், 15 கலைகளும்; சக்தியும், அழகும், வல்லப ஆற்றல் களையும்; "மதி" (மனம் & புத்தி) மயங்கும் வண்ணம் "ஈர்ப்பு" சக்தியும் கொண்டதாகும்! இவை அனைத்தும் "ஒன்றில் இருந்து" "மற்றொன்று" எப்படி தோன்றுகிறதோ! ஒன்று இல்லாமல், மற்றொன்று எப்படி தோன்றும் இல்லையோ! எப்படி தோன்ற முடியாதோ!



ஒ

16 வயதாகிய,
அப்படி, அக்காலாதீத பரசொரூபமான, அந்த
ஒன்றிலிருந்தே, அனைத்தும் தோன்றின. அனைத்தும்
இருந்தன! அனைத்தும் அதிலேயே மறைந்தன! இதுவே
சத்தியம்! சத்தியம்!

ஆகவே உன் ஸத்குருவின், சத்திய வாக்குப்படி,
"மௌனமாகிய" பரமே / பரமாகிய மௌனமே!
அனைத்தும், என்ற உறுதி நிச்சயத்தால், இருப்பது
ஒன்றே! நடப்பது நலமே! என அமைதியுற்றிருப்பாயாக.

37 "மனோ" விருத்தி உண்டானால், நாமரூப,
ஜகத் ஜீவ சொரூபங்களும், ஈஸ்வராதிகளும்,
"உண்டு!"
சாட்சி விருத்தி என்ற "அறிவு" (ஸ்ரீபகவான்) நாம்
ஆனால், நாமரூப, ஜகத் ஜீவ சொரூபங்கள், அனைத்தும்,
நம்முடையதாகவும், நாமாகவும், தானே இருப்போம்.

மனோமய கற்பனை உண்டானால், அம் மனோமய சிருஷ்டி
யாகிய, ஜகத் ஜீவ, ஜீவ சொரூபங்களும், "குணா"
வடிவமாக விளையாடி களித்துக்கொண்டு, பிறவி துன்பத்தை
அவஸ்யம் கொடுக்கும்.




உ

அம்மணமே, "அறிவாகி" அதாவது அம்மணமே,
சர்வார்ப்பணத்தால், அறிவு (ஸ்ரீ பகவான்) எனஆகும்;
நாமரூப ஜக ஜீவ, சொரூபம் அனைத்தும், நமக்கு,
"அன்னியமாய்" இல்லாமல், எல்லாமே நாமாய்,
நாமே எல்லாமாய்! ஆதி நிறைவுடன் நிறைந்து இருப்போம்.
அங்குமனம் மறைந்தான, தன்மையால், "நாம்"
அறிவு சொரூபமாக, இருந்து கொண்டு
பிரம்மார்ப்பண நிலையால், எல்லாம் மன்னாகிய பரமே
என்னும், பரமாகிய மன்னனே! ஸ்வய அனுபவம் பெற்று,
இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! என அம்மா இருப்போம்.

(38) "கட" ஆகாயமும் "மட" ஆகாயமும் ஒன்றே!

இங்கு கடம் என்பது, குடம் என்றும், அக்குடம் என்பது
நம் தூல சரீரம் என்றும்; பொருள் கொள்ளல்வேண்டும்!
இக்குடமாகிய, தூல சரீரத்தினுள் உள்ள, ஆகாயமும்
எங்கும் பரந்து விரிந்து ஏகமாய் எங்குமாய், எதுவுமாய்,
"நிறைந்திருக்கும்" ஆகாயமும் ஒன்றே!
எனப்பொருள்படும்!



இதைப் போலவே "ஊசிநாட"
இடமில்லாமல், பரந்து விரிந்து, எங்குமாய்,
எதிலுமாய், ஏகமாய், சர்வ வியாபகமாய்,
உள்ள அம்பர சொரூபமே "ஆத்மாவாய்"!
நம்முள்ளும், நிறைந்திருக்கிறது என்பது சத்தியம்.
இங்கு குடமாகிய, நம் உடலே உபாதை என அறிக!
இவ்வுடலோ, எண்ணத்தால் தோன்றிய ஒன்றே!
அவ்வெண்ணமோ, நாம ரூப, ஜக ஜீவ, சொரூபங்
களும் (உறவு சுற்றம் நட்பு) மற்றும் பொருள்களும்,
சம்பந்தம் கொண்டு பின்னிப் பிணைந்த,
"மனே" வடிவமாகும்! அம்மனமும். அதன் எண்ணமும்,
இணைந்து பிணைந்த தே புண்ணிய பாப "வினை" ஆகும்.
மனே எண்ணம் நசித்தால், வினை நசிக்கப்படும்!
வினை நசிக்கப்பட்டால், பாவம் மறையும்! மறைந்து
பாவம் திரும்பவும் எழாது ஒழியும்! அச்சமமே
எண்ணமும், அதன்வழி பாவமும், அழிந்து கெட்டால்,
ஜனன மரணம் இல்லா தொழியும்!

(111)



அம்மனதின் "உறுதி" நிச்சயத்தால், கண்ணால் காணும், அந்த "நாமரூப" தோற்றங்களும், "மண்ணுக்கு" அன்னியமில்லை என்றும், அம்மண் "பரத்திற்கு" அன்னியமில்லை என்றும், சந்தேகம் அறத் தெளிந்து உணர்ந்தால், மண்குடமாகிய உடலும் இல்லை. அக்குட ஆகாயம் என்ற ஆன்மாவும், வெளி ஆகாயமாகிய, பரமான்மாவும் பிரசொருபமும் ஒன்றான தன்மையால், இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என இருப்பாயாக!

(39) மனோமய கற்பனை வடிவமான "ஜீவ/பர" சொருப பேதத்தை, நாசம் செய்! அங்கு, "தத் பத சொருபமும்! த்வம் பத சொருபமும்! ஒன்றே என உணர் — அவ்வுணர்வால்தான், எப்படி அப்பேதம் உண்டாயிற்றென்றால், உபாதி என்ற தொழிலால், பேதம் என உணர்ந்து, அதை நீக்குவாயாக!



உ



இங்கு, ஜீவ பர பேதம், எனக் கூறுவது, ஜீவ நிலையையும் ஈச நிலையையும் கூறி, இவ்விரண்டையும் பேதம் நீக்கி, ஐக்கியம் படுத்துகிறான். அவ்விரண்டும் இணைந்த நிலையில், "அரூப" சொரூபமான, பரம் பொருளையும், ஒன்றாக்கி விடலாம் என்கிறார்.

அதாவது?

ஈச நிலையாகிய, பரமாத்மாவை ஓர், "அரசன்" என உணர். ஜீவ நிலையாகிய, ஜீவாத்மாவை, ஓர் படைஞன் என்ற, "சேனாபதி"யாக உணர்.

இவ்விருவரும் இருப்புத்தன்மையில் **பேதம்** உண்டு.
" இயக்கத்தன்மையில் " "
" ஆடை அணிகலனில் " "
" அதிகார வார்த்தையில் " "

**ஆனால்?**

அதாவது "மேலே கூறிய நான்கையும், விட்ட நிலையில், **சாதுவா**, ஆடையில் நீங்கி வந்து விட்டால்,



உ

உதாரணம்:- அரசன், தம் மகுடத்தையும், செங்கோலையும் "விட்ட" நிலையிலும், படைஞன் என்ற தளபதி தம் அனைத்து ஆயுதங்களையும் "விட்ட" நிலையிலும், அதாவது, தம் தம் "பதவிகளை விட்ட" நிலையிலும், இவ்விருவரும், நபர் இருவராக இருந்தாலும், இனம் (மனித இனம்) ஒன்றே! அதே போல்?

ஈசனும், ஜீவனும், உபாதி பேதத்தால், அதாவது, தொழிலால், பேதமே தவிர, ஆன்ம சைதன்யத்தில் ஒன்றே தவிர, இரண்டல்ல! ஈசனுக்கு ஆன்மா ஜீவனே! ஜீவனுக்கு ஆன்மா ஈசனே! ஆகவே தற்பத ஈசனும், த்வம்பத ஜீவனும், "ஒன்றே" என்றும், இவ்விரண்டும் "அஸி" பதபர சொரூபத்திற்கு, அன்னியமில்லை என்றும், சந்தேக கலக்க, பயமின்றி தெளிந்தால்,





அனைத்து நாம ரூப பேதமும் "உபாதி" (பேதங்கள்)
அதாவது அழியும் "உடல்" இருப்பினும்,
மனதின் (கற்பனையின்) அழியும் "உடல்" மாயா
இயக்கத்திலும்தான் மாறுபாடும்! வேறுபாடும் ஆகும்!
ஆனால் உண்மையில், எல்லாம் ஒன்றே! என்றும்,
எல்லா நாம ரூபங்களும் "மண்ணுக்கு"
அன்னியமில்லை என்றும், மண்ணே பரம் என்றும்,
பரமே மண் என்றும், இருப்பது ஒன்றே! நடப்பது
நலமே என, சந்தேக கலக்க பயமற தெளிக!

---

(40) சுத்தமான ஸிதாகாயம்! அச் சொரூபத்தில்,
நாமரூப (1) (பாடல் 95) பிரபஞ்சம் இல்லை!
தாவாதீத அந்த ஒன்றின், அஸ்தித்தை, "ஸத்" எனச் சொல்லுவார்கள்.
அதை சொல்லாலும், வரிவடிவிலும், விளக்கவோ, சொல்லவோ,
கேட்கவோ, இயலாத ஒன்றாகும். அதில் தோன்றியதே
"ஸ்புரம்" என்றும், "ஸிதாபாயம்" என்றும்
ஸ்ரீமஞானிகள், அனுபவநிலையில் சொல்வர்.



உ



வாக்கிய விளக்கத்திற்காக, (சொல் விளக்கமே யன்றி உண்மையில் இல்லை) ஸித்பரத்தை, ஓர் உருவமாகவும்; (ஸதாசிவம் & மஹேசன்) (இரண்டும் ஒன்றே)

"அதன்" நிழலே, யோகமாயா என்ற "ஸிதாஹாயம்" எனச் சொல்லவாம். அதாவது, ஸத்திலிருந்து தோன்றிய, ஸித்தின் வடிவம் ஸிதாஹாயம் எனப் பொருள் கொள்க! இது "ஆகாயமே" ஆகும்

உதாரணம்:- "ஸத்" என்பது உபயோகமில்லாதது, உபயோகிக்க முடியாதது. உபயோகிக்க இயலாதது; "வெறும் மண்" ஆகும்!

"ஸித்தில்" தோன்றிய, "ஸிதாஹாயம்" என்ற ஆகாயமானது, பசையுள்ள "ஜலம்" ஆகும்

இப்போது இந்த ஸத்தும், ஸித்தும், இணைந்து பிசைவதால் "நாமரூபம்" உண்டாக்கத்தக்க களிமண் எனஆகிவிட்டது!



உ

நாமரூபம் என்றுவே
இரண்டு என ஆனதால்
அது த்வைதம் ஆனது!
அங்கு ஸ்ரீபகவான் என்ற
அளவில் கூட, இடம் இல்லை
என்கிறார். விளக்கத்தை
கூர்ந்து, அறிந்தால்தான் விளங்கும்!

"பரம்" என்ற மண்ணிலும்! "மாய" (ஆகாயம்) என்ற ஜவமும்! இணைந்தநிலையே, அது சிருஷ்டிக்கு, ஆதாரமாயும்! ஆதரவாயும்! ஆகாரமாயும்! அமைந்த "மனை" உள்ள, களிமண் என ஆனது!

இக்களிமண்ணில், "நாமரூப" பிரபஞ்சம் இல்லவே இல்லை!

இக்களிமண் இல்லாமல், " " பிரபஞ்சம் தோன்றமுடியாது!

ஐ) அத்துவைத பிரபஞ்சம் பரமார்த்திகத்தில், "இறையனையும்" இல்லவே இல்லை!

இந்த இரண்டுபட்ட, பிரபஞ்சம் எனச் சொல்லும் நாமரூப தோற்றமானது, இறையனவும் (ஸ்ரீபகவான் என்ற, தெய்வீக நிலையிலும்) அனுப்பிரமாணமும் இல்லை என்கிறார். இதன் ரகஸ்யம் என்னவென்றால்? முன் ஒரு பக்கத்தில், "ஏழு உலகத்திற்கும்" அபூர்வமான, விளக்கம் கொடுத்தோம். அதில்,



இறையாவும் இல்லையென்றால்? (117)

சகல ஆற்றல் உள்ள ஸ்ரீபகவத் சொரூப நிலையில்கூட அது இல்லையெனப் பொருள் படுகிறது. அதாவது அதுவாக ஸ்ரீபகவான் இருக்கிறான் என்றும், ஸ்ரீபகவானாக அது இல்லை! என்றும் பொருள்படும். இதன் முக்கியம் நாம ரூப சூட்சுமமும், அங்கு இல்லை என்பதே ஸத்தியம்!

இப்பூலோகம், ஒன்றைத் தவிர, மற்றும் "ஆறும் மறை" நிலையில், கற்பனையின் தொடர்புடையதாகிய, பூலோகம்! பித்ரு லோகம்! சொர்க்க லோகம்! ஆகிய இம்மூன்றும் "மனுஷ்ய தேவர்கள்" (தேவதைகள்) உலகம் என்றும், "அறிவு" நிலையில் "மாயா" காரிய நிமித்தம், சூட்சும "தெய்வ" நிலைகள் என்றும்; (கைலாயம், வைகுண்டம், பிரம்ம லோகம்!) "ஜீவ" நிலையில் லோக்குவரவு "(ஜீவு)" இடம் என்றும்; "கீதை"யின் வாக்கிய விளக்கமேயன்றி, வேறொன்றுமில்லை, என்பதே ஸத்தியமாகும்! ஆகவே, "துவைத" பிரபஞ்சம் எனச் சொல்லும், இந்த ஆறும், பரம் என்ற ஸ்ரீபகவான்! ஸ்ரீபகவான் என்ற பரம்! நிலையிலும் (இறையாவும்) ஸ்ரீபகவான் அளவிலும் இல்லை என்பதே ஸத்தியம்.



உ




# “ஆமையும்?”

③ விவகாரநிலையில் “ஸித்தனுடைய” விவர்த்தமதாகும் (வியாபார மிச்சமின் விபர இயக்கத்திற்காக) சித்தம்
தாமே, செய்கின்ற (சித்தத்தால், நாமரூபமாக தோற்றுகிற பிரபஞ்சம் என, கானல் ஜலமெனத் தோன்றுகிறது.)

“வார்த்தை” அளவில், சொல்லப்படுவதால், வாக்கே உலகமாகவும், வாக்கே வாழ்க்கையாகவும்;
வாக்கு மௌனமானால், உலகம் இல்லை! என்பதே ஸத்தியம்.

(பேசிப் பேசி! பேசிப் பேசியே! இல்லா உலகிற்கு **உயிர் ஊட்டுகிறோம்** (இருப்பதாக்குகிறோம்.))

அதாவது, ஸித்தின் பிரதிபிம்பமான, சித்தத்தால்தான், நாமரூப உலகிற்கு, இது உண்டு என, சொல்லமுடிகிறது. சித்தம் இல்லையானால், மனமும் இல்லை! சித்தின் செய்கையும் இல்லை! அந்த நாமரூபம் அனைத்தும் மனமயமாகி விடும்! அதுவே பரமார்த்திகமன்றோ என்பதும்;




மண்ணாகிய பரமே! என்பதும், ஸத்தியமாய் விளங்கும்:
ஆகவேதான், ஸங்கல்பமே உலகம் என்றும், ஸங்கல்ப
ரஹிதமே மோக்ஷம் என்றும், சொன்னார்கள்!
எண்ணம் உண்டானால், உலகம் உண்டு! என்றும்,
எண்ணம் இல்லையானால், உலகம் இல்லை! என்பதும் ஸத்தியமே!
ஆகவேதான், எம் ஸ்ரீரிபு மஹாத்மா, கடைசி அடிகளில்,
அழகாகச் சொன்னார்.

(4) அவ்வாசகம்:- புத்திரனே! அச் சித்தத்தை, பூரணமாம்
பாவனையால், நாசம் செய்வாய்! என்றார்.

பூரணமான பாவனையாவது:- எல்லாம் ஒன்றே! அது சிவமே!
அது யாமே! யாமே அது! என்ற "அகண்டாண்ம"
பாவனையாகும். இப் "பர" பாவனை ஒன்றுவேயே, நம் கவனக்
குறைவால், சித்தம் என ஆனதை, "ஸிதம்பரம்"
என ஆக்கலாம்! ஸிதம்பரத்தை, "ஸத்தாக"
ஸத்தை "நாமாகவும்"! நாமே ஸத்தாகவும் ஆன
நிலையில் மண்ணை, பரமாகவும், பரமே மண்ணாகவும் ஆகும்!
அங்கு இருப்பது ஒன்றே! நடப்பது நவமே! எனவே பாக்கல
எப்பயிற்சியும், முயற்சியும் இல்லாமல் ஆக்கலாம்!


(120)



(41)

(பாடல் 96) இருமையில்லா சுருதி தொனியில், "ஏகமாக" இருக்கின்ற, ஆன்மாவே தம்மிடத்தில், "மருவியரும்" இணைந்து பிணைந்திரும் "மாயா" என்ற மனம் சக்தியிடத்தில், "கனவு" என ஒன்றை உண்டுபண்ணி, "நாமரூப" பொருள்களை, அவைகளே நம்மை தேடி வரும், நிலைமை உண்டுபண்ணியது (அங்கு நாம், விரும்பவில்லை என்பதே, சத்தியம்) போல்?


ஏகமாய்! எங்குமாய்! எதிலுமாய்! சர்வவியாபகமாய்! உள்ள அந்த காலாதீத "பரப்பிரம்மமானது" தம்முடைய, "யோக மாயா" வுடன் இணைந்து பிணைந்து! "தம்" சித்தத்தின் மூலமாக "நாமரூப" ஜக ஜீவ, ஜட கடபடாதிகளையும், கோடானுகோடி அண்டரண்ட பிரம்மாண்ட சராசரங்களையும், உண்டுபண்ணியது.





முனி சொன்ன நிலையில், அப்பர சொரூபமானது,
"**தாமே தமக்குள்**" என்ன செய்கிறது என்றால்,
பரமும், மாயாவும், இணைந்து பிணைந்ததால்,
"**சிவ/ஜக/ஜீவ/பர/**" வடிவங்களாக
இருந்து கொண்டு "**மௌன**" பாவனையால்,
"**சுகசயம்**" - அடைந்து தூங்கிப்பது போல்
**நடிக்கிறது** என்பதே பக்தியாம்!
விளையாட்டாக,


ஆழ்ந்த உறக்கத்தில், இருமை (இரண்டு என்ற நிலை)
இல்லை. காரணம், அங்கு நம் ஆன்மாவும்!
நம் மனமும்! இணைந்து பிணைந்து! (நம் தமிழக
பழமொழி போல் :- "**ஈருடல் ஓருயிர்**"/
என்பது போல்) உடல் இரண்டாக தோற்றினும், அனுபவிக்கும்
**இன்பம் ஒன்றே!** என்ற நிலையில்;



நாமரூப பொருள்களையும், அது சம்பந்த ஜீவ தோற்றங்களையும், நாடி தேடி ஓடி போகாமல், தமக்குள்ளேயே "ஸ்ரீ எண்ண" வடிவில், உண்டு பண்ணிக் கொண்டு "ஸ்ரீ அச்சுதனாம்" இன்ப துன்பமாக, சுவைப்பது போல், ஓர் "பாவனை"யை காட்டுகிறது. ஆதல் (விளையாடல்) அது ஒன்றுமில்லை, என்பதே ஸத்தியம். அது உண்மையுமல்ல. பலனும் அல்ல! அது வியர்த்தமே! (அது வீணே)

அக்கனவில், வந்ததும், இருந்ததும், ஆடியதும், அனுபவித்ததும்! அத்தனையும், விழிப்பு நிலையில் பொய்யே! ஆனாலும் அது மனதின், "கற்பனை கனவையே" ஆகும். இதைப் போலவே!!!

ஏகமாய்! எங்குமாய்! எதிலுமாய்! சர்வ வியாபகமாய்! உள்ள அக்காரவாசிக பரசொரூபமும், நாம, ரூபம், குணம், குறி, காலம், தேசம், வர்த்தமானம், மனம் வாக்கு காயம் ஆகிய இப்பக்திறையும், வாக்கோ வரியோ, இவை எதனையும், விளக்க முடியாதாக, இருந்த போதும், ஓர் "விளையாட்டின்" நிமித்தமாக.





அங்கு ஆத்மாவும்! மனமும்! எப்படி இணைந்து பிணைந்து
கூடிக் களித்து, நாம ரூப, பொருள்களை, தமக்குள்ளேயே
உண்டு பண்ணி, கனவில் பொருள்கள் வந்ததும்!
இருந்ததும்! ஆடியதும்! பாடியதும்! அனுபவித்ததும்!
அத்தனையும், விழிப்பு நிலையில் எப்படி "பொய்யோ"
அதேபோல இங்கு?
"பரமும் & மாயாவும்" கூடிக்
களித்து, இணைந்து பிணைந்து தமக்குள் "தாமே"!
தம் சித்தத்தின் ரூபமாக, நாம ரூப, ஜக ஜீவ, ஜடகட
பதார்த்தங்களையும்! கோடானுகோடி, அண்ட ரண்ட பிரமாண்
டங்களையும்! கோடானு கோடி சூரிய சந்திரர்களையும்!
உண்டு பண்ணிக் கொண்டு, விளையாடுகிறது என்பதே சத்தியம்!
"அங்கு" ஆத்மாவும் & மனமும்! விளையாடுகிறது!
"இங்கு" பரமும் & மாயாவும்! விளையாடுகிறது!
பரமும் ஆத்மாவும் ஒன்றே! மாயாவும் மனமும் ஒன்றே!
இவ்விளையாட்டுகளை, விபரீதமாக கொண்டு, கவக்க



உ

சந்தேக பயத்தால், "சஞ்சலம்" அடைவது
"மாயா மனமாகும்!" இதனைத்தான்,
எம் ஸ்ரீ வஷிஸ்டர் பிரான், சொல்லுவார்?
ஞானத்தின் சலனசக்தியே "மனமாகும்!"
சலிக்கின்ற அம்மனமே "ஜகமாகும்!"
சலனம் அற்றால் "மனம் நசிக்கும்!"
ஆகவே, இவ்வுலகை சலனம் இன்றி பார்!
அதாவது, போக்கு வரவுகளிலும், கொடுக்கல்,
வாங்கல்களிலும், "நான்! எனது!"
என மயங்காதே! அங்கு "நீ" ஸ்வத்தாகவே இருப்பாய்!
அங்கு உனக்கு, அன்னியம் இல்லாத் தன்மையால்,
"தான் தானாய் தனித்திருப்பாய்"
அதுவே மோக்ஷம் ஆகும்! என்றார்!



உ



"இப்படி சந்தேக, கலக்க பயம் இல்லாமல், "உறுதி" நிச்சயம் செய்து விட்டால்! அனைத்தும் வெய்யிலின் மஞ்சள் எனமறைந்து விடும்! அங்கு இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என முடிந்து விடும்!


---

42 எல்லாம் ஆத்மாவே என்றும்! எல்லாம் பர சொரூபமே என்றும்! எல்லாம் பரப்பிரம்மமே என்றும்! "நாம் அதுவே" என்றும்! கல்ப கோடி காலம், பயிற்சியின், சாதனை செய்தாலும்; "இறை" கருணை என்ற, ஸ்ரீபகவான் கிருபை, பரிபூரணமாக, பெறவில்லையானால், அனுபவம் கூடாது! அது ஆகவும் முடியாது! அதுவாய் ஞானமாகவே, இருக்கும் என்கிறார்கள், அனுபவ ஸ்ரீ ஞானிகள்!

---

எம் ஆனந்தகுழந்தைகளே! மற்ற "மூன்று" யுகங்களுக்கும், இவ்வாசகம் பொருந்தாது, என்பதே ஸத்தியம்! "நாம்" அதுவே! அதுவே நாம்! இதுவே ஸத்தியம்! ஸத்தியம்! ஸத்தியம்!!







"நாமே" அழிக்கிறோம், ஆத்மாவாக இருக்கிறோம். அழிப்பதுமே, நமக்கு ஆத்மாவாக இருக்கிறது. இதுவே பிரமாண உண்மையாகும்.


ஆனால் இக் "கலியுகம்" "தோஷத்திற்கே" உரிய காலமாகும். இத்தோஷம் நீங்கினாலன்றி, நாம் அழுத்த முடியாது! காரணம்?

முக்தி என்பதே, மனமுடிச்சு அவிழ்வதேயாகும்!

மனமுடிச்சு அவிழாமல், முக்தி இல்லவே இல்லை! நாமும் முக்தி அடைவதில்லை! மனமே முக்தி அடைகிறது! நாமும் மனிதனே! மனமுடிச்சினால், திரும்ப திரும்ப, நாமும் எடுத்தான் செய்யும். எடுத்தே ஆக வேண்டும். இம்மனமுடிச்சு, தோஷகுணங்களாகவே, பிறக்கிறது (இருப்பது உறுதி).

தோஷகுணம் என்பதே, அஹங்கார மமகாரம் ஆகும்!

மற்றைய மூன்று யுகங்களிலும், "நாம்" என இருந்தது. இக் கலியுகத்தில் மட்டும், "நான்" என ஆக்கிக் கொண்டது.



"நாம்" என்றால் பன்மை! அங்கு ஸ்ரீ பகவானையும், இணைத்துக் கொள்வதால், அத்தோஷம், அவன் ஏற்றுக் கொள்கிறான். காரணம் எல்லாம் அவன் பொருளாக இருப்பதால்.


"நான்" என்றால் ஒருமை! அங்கு இந்த ஜீவனே, தானே வலிய அத்தோஷ குணங்களை, ஏற்றுக் கொள்வதால், ஜனன மரணம் உண்டாகிறது.

இக்கலியால், ஸ்ரீ பகவானிடம், முன் கூறிய நாமியால், சர்வார்ப்பணமாக விட்டாலன்றி, தோஷ குணம் அழியாது! தோஷ குணம், அழிந்தாலன்றி புண்ணிய பாபம், தொலையாது! புண்ணிய பாபம், தொலைந்தாலன்றி, பிறவி நோயும் தீராது!


என்பதே, பிரமாண உண்மையாகவும். அனுபவ ஸ்ரீமஹான்களின், வாக்காகவும் இருக்கிறது!

மண்! பொன்! பெண்! மயக்கத்திலே இருந்து; கண்கெட்ட மாட்டு போல், கலங்கினேன் ஆரணமே! (மாடு போல்)

என்ற, அனுபவ ஸ்ரீமஹான்களின், வாக்கின்படி, இம்மூன்றும், நாம ரூப தோற்றம் ஆகும்! இம்மூன்றும்,




இவ்வுலகம் உனக்கு நாம ஞேயமாத தோற்றும் பரியந்தம்,
ஸ்ரீ பகவானும் பக்தியமாய் உண்டு.
மேலே கூறிய, அம்மூன்றும், பொம்மையாகவும்
மன்றுகளும் தோற்றி விட்டால்,
ஸ்ரீ பகவான் அங்கு இல்லை, என்பதே பக்தியம்,
அங்கு நீயே ஸ்ரீ பகவான் ஆகி விட்டாய். என்பதும்
பக்தியமே, இங்கு அம்மூன்றும், நியமங்காமல்,
இருக்க வேண்டுமானால், அம்மூன்றையும், எவன்
இவ்வுலகிற்கு, தந்தானோ அவனிடம்,
ஞாதாக்ரூவமாத சர்வார்ப்பணமாக, பிரவ்ருத்தானே?
அப்போதுதானே, உண்மை முடிச்சின் தோற்ற
குணங்கள், சாம்யவாகும்! அங்கு தானே, பிறவி
நோய் அருபமே! ஆகவேதான் ஸ்ரீ பகவான் கிருபையை
பெற்று, அவன் திருஷ்டியாகி, தோஷ குணங்களையும்!
எல்லாம் நீயே! எல்லாம் உன்னுள்! எல்லாம் உனதே!






எனச் சர்வார்ப்பண நிலையில், விட்டு விட்டால், தோஷ குணங்கள், உன் "மனதை" விட்டு அகன்ற தன்மையிறால், மனமுடிச்சு அவிழ்ந்த தன்மையால், மனம் பாரம் இல்லாமல், வேசாகி (லேசாகி) விடும். அப்படி மனத்தோடு மனமறைவு, எல்லாம் மண்ணே என்றதும் "அது" நிலைத்து நிற்கும். மண்ணாகிய பரமே! பரமாகிய மண்ணே! என்ற ஓர்மைக்கலையும், அதுவும் நிலைத்து நிற்கும்! நானே ஆத்மா! நானே பரம் பொருள்! நானே பரப்பிரம்மம்! என்றதும், நிலைத்து நிற்கும். அங்கு நீ அதுவாகவும்! அதுவே நீயாகவும்! இருப்பதால் இருப்பது ஒன்றே! நடப்பதுவும் ஏகம்! என ஆத்மா அகமாக இருந்த வகை.

43 பஞ்சபூதங்களும், அவைகளை சிருஷ்டி செய்த ஈசனும், அனைத்து ஜீவ கோடிகளும், மற்றும் எல்லாமே இல்லை என்றும், இதை போதிக்கும் "பாடம்"! இதை பார்ப்போர் கேட்கும் "நீயும்"! மற்றும் "பாகம்"! இல்லை என்பதே சத்தியம்!



இதைகவனி:-

தூலபூத தொகுதிகளான, சரீரங்களைவிட,
சூட்சுமமான இந்திரியங்கள் (ஞானேந்திரியம் கர்மேந்திரியங்கள்) பலபல! அப்பல இந்திரியங்களிலும் (அவைகளில் இயங்கும்) மனம் சூட்சுமம்! குற்றம் குறையாக கற்பனை செய்யும், மனதைவிட, (ஸ்ரீபகவத் உணர்வோடு அவனே எல்லாம்) என நிச்சயம் செய்யும்,
புத்தி என்ற சித்தமே அதிசூட்சுமம்!
அப்புத்திக்கு, விகாரகியும், ஸ்வகாரணமாயும்,
இருக்கப்பட்டவரே; தேகி என்ற ஆத்மா!
மாயை சட்டக்குள் இருப்பதால்
அதாவது, இதுவே சடாஸ்த பிரம்மமாகும்!
அதாவது த்வம்பத, ஜீவாத்மா என்ற ஆத்மசொரூபம் ஆகும்!
என்று, ஸ்ரீமத் பகவத் கீதையில், எமதண்ணல் திருடன், கண்ணன் சொல்வதாக, ஸ்ரீமஹான்கள் கூறுவர்.
இதைஸ்ரீமஹான்கள், எப்படி விளக்குகிறார்கள் என்றால்?



(131)

பஞ்சீகிருதம், பண்ணப்பட்ட, (பஞ்சபூதங்களால் ஆன) "தூல" சரீரங்கள் எல்லாம்.
"நாமரூபத்தால்" துவங்கப்படுகின்றன.
விளங்கப்படுகின்றன! விளக்கப்படுகின்றன!!
இவ் "விளக்கமே" தற்கால, உண்மையாக
இருப்பதால், மனம், புத்தி, சித்தம், படைத்தோர்,
அனைவரும் "ஸத்தியம்" என நம்புகின்றனர்.
இது அஞ்ஞானிகளின், பழக்க வழக்கம் ஆகும்!
இவை அனைத்தும், மண்ணுக்கு அன்னியமில்லை என்று
அனைத்து தாவரசங்கம நாமரூபங்களை கெடுக்கவும்!
(நான் எனது அல்ல என கெடுக்கவும்)
அடுத்து, இதே சூட்சுமமான, மனம் புத்தி சித்தங்களை,
"உண்டு" எனச் சொல்லும், சூட்சும நாம ரூப,
பிரபஞ்ச (எ.சு) சொரூபங்களையும், அவர்கள்



"தொழில்" கர்த்தாக்களாக, இல்லை என்றும்;
"ஸத்குரு" ஆகவும்/ "அது" ஆகவும் தான்,
இருக்கிறார்கள் என, உறுதிபண்ணி, தெய்வீக
நிலையில், உள்ள, அனைத்து நாம ரூபங்களையும் கொடுத்த
வேண்டும்.
தூல நாம ரூபங்கள் அனைத்தும், மண்ணாகிய பரம்!
என்றும், பரமாகிய மண்ணே! என்றும் உறுதி செய்து,
சூட்சும நாம ரூபங்கள் அனைத்தும், ஸ்வய ஒளியாகிய,
பரமே! என்றும்; பரமாகிய ஸ்வய ஒளியே! என்றும்
உறுதி செய்தால்; "நீயும்" இல்லை! "நானும்" இல்லை!
"யாரும்" இல்லை! ஆனால் எல்லாம் அப்பரமே!
அப்பரமே எல்லாம் என்று, சந்தேகமற தெளிவாகும்.
இப்படி அசையற்ற நிலையில், உறுதி செய்தால், எங்கும்,
இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என இயல்பாய் அமையும்.



44

1. புரையற்ற (குற்றம் குறையற்ற) நிர்உபாதி (உபாதை இல்லாத) சொருபமே, நான்கு மஹாவாக்கியங்களின் பொருளாகுமே!


2. (அது) பிரிவுற்றால், சோகம் சஞ்சலம் கொடுக்கின்ற "நாமரூப" தோற்றங்கள் ஆகுமே!

3. பரந்து விரிந்து (எங்கேயும், ஏகமாய், முழுமையாய்) உள்ள அந்த ஒன்றே என்றால், அது "மலம்" அற்ற, மனம் அற்ற ஒன்றாகுமே!

4. தெரிவுற்ற (இப்படி) உண்மை உணர்வுடன் நிச்சயம் செய்தால் சந்தேக, கலக்க, பயம் அற்ற பிரம்மமாவாய்!

---

1. குற்றம் குறை, பேதம், விருப்பு வெறுப்பு, இவைகள் எந்த விதை, உனக்குள் நீங்குகிறதோ, அந்த "விதை"யே நான்கு மஹாவாக்கியங்களின், பொருளும் அதன் "ஸ்வயஅனுபவம்" நீயே பெற்றவனாகிவிடுகிறாய்.



(134)

(2) அதைவிடுத்து, நாம ரூப, சொந்த, பந்த, பாச, பற்றில், மனம் விடுந்து விட்டால், அதுவே உன்னை, **சோகத்தில்** (சந்தேக, காங்க, கலக்க, பயம்) ஆழ்த்தி விடும்!

(3) ஆணவம்! கன்மம்! மாயை! என்றிடும் **மலமற்ற** (இதன் மூலகாரணமான **மனம்** அற்ற) நிலையில், எல்லாம் ஒன்றே, என்று விரிந்து பரந்து, எங்குமாய், ஏகமாய், நித்யமாய், அந்த ஒன்றே! அதுவே நான்! என அறிவிட்டால் அதுவே பிரம்மானந்தம்!

(4) மேலே கூறிய, ஒன்றுவதும்! முன்றுவதும்! அனந்த நிலையில், நிலைய அனுபவம், பெற்று விட்டால் (வாய் ஞானமில்லாமல்) அங்கு வார்த்தை இல்லை! அங்கு வரியும் இல்லை!

அங்கு நாம ரூப, சம்பந்த, சந்தேக கலக்க பயம் இல்லாத தன்மையால், உனக்கு அன்னியம் இல்லாத தன்மையால், அதுவே நீயாவாய்! நீயே அதுவாவாய்! அங்கு இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என சுகமாக இருப்பாய்.



உ

135

(45) உன்னில் நீ நிலைத்து நில்! அதுவே மோக்ஷம்.
தன்னில் தான், தனித்தோம்பி, தரங்கமென (கடல் அலையென) அசைவதுவே "பந்தம்" ஆகும்!
உன்னிடமே, உன்னையன்றி, உலவு தரும், (அசைத்து சஞ்சலத்தை தொடுக்கின்ற) அன்னியமாய், எவரும் இல்லை! (அதாவது) "ஈசனோ! ஜீவனோ!" யாரும் இல்லவே இல்லை! ஆகவே,
"தனிமையானவனே"! நீ எந்த வடிவும், தன்னிடையே! தனியாக! தனித்திருப்பவனாக!

நீயோ, உன் அறியாமையால் (உன் கவனக்குறைவால்) "நான் ஓர் ஜீவன்" என (மனதால்) நம்பி கெட்டுப்போனாய்.
அதை இச்சாதனையே, மாற்றுவதாயாக! எப்படி எனில்? நான் அற்ற தன்மையில். உன்னை ஸ்ரீ பகவானுடன், அனுபவம் பெறும் வரையில், "யாம்" ஸ்ரீ பகவானின் குழந்தையே! அனைத்து ஜீவர்களும், அவன் குழந்தைகளே என்றும்.




உ

(136)

விஸ்வம் ஆகும் நீயும்,
விராட் ஆகும் நீயும்,
ஆனதே ஒன்று, சொல்ல
ஒன்று, எதுவொன்று
ஓர் பரவசநிலை ஆகும்.

அனைத்து பொருள்களும், அவன் பொருள்களே! என்றும், "எல்லாம் அவனே" என்றும், இவ்வனுபவம், பக்தியமானால், அவன் கிருபையால், "நீயே விஸ்வம்" என ஆகிவருவாய்! அதாவது:- எல்லாமாய்! எங்குமாய்! எதுவுமாய்! ஏகமாய் நீயே நிறைந்திருப்பதே விஸ்வம் ஆகும்! அங்கு உன் அனுபவத்தின்படி, "நீயும்" ஒருவனே! உன் ஸ்ரீபகவானாகிய "அவனும்" ஒருவனே! உன் யதார்த்த சொரூபமாகிய "பரமும்" ஒன்றே! இந்நிலையில், விஸ்வம் என்ற நிலையில் விரிந்து, பரந்து, எங்குமாய், எல்லாமாய், ஏகமாய், எதுவுமாய் "நிறைந்து" உயர்ந்த நீ, இப்போது ஏக ஒருவனாய் "விராட்" புருடனும்! நீ ஒருவனே. இப்போது, உனக்கு அந்நியமாய், எவனும்! எதுவும்! இல்லவே இல்லை, என்ற நிலையை,



137

"பூரண" அனுபவமான உணர்வு, அசைவு
உண்டுபண்ணும், எதுவும் இல்லை! காரணம்?
முன்பு மனம் இருந்தது! அது மறைந்தாகி விட்டது!
,, மாயா இருந்தது! அதுவும் பகவானை உணர்ந்து,
கலந்து மயமாகி விட்டது. இப்போது அசைவை,
கொடுக்கும், மனமும் இல்லை! மாயாவும் இல்லை!
இவ்விரண்டால் தோன்றிய, எந்த "நாமரூபம்"
இல்லாதன்மையால், நீயே அது! அதுவே நீ!
ஆகவே இங்கு, இருப்பது ஒன்றே! நடப்பதும் அதுவே!
என்பது சத்தியமாகும்!

46 முன்பு கூறிய நிலையே, அகண்டானந்தம் ஆகும்!
இந்த உறுதி நிச்சயம் செய்யச்! செய்ய! செய்யச்! செய்ய!
செய்யச் செய்ய! செய்யச் செய்ய! செய்யச் செய்ய!
செய்யச் செய்ய! செய்யச் செய்ய! செய்யச் செய்ய!
செய்யச் செய்ய! செய்யச் செய்ய! செய்யச் செய்ய!



138

இ

அகண்டாண்ட பாவனை
செய்து ஸ்வய அனுபவம்
பெறும் போது சமுத்திரத்தில்
உப்பு தனியாக எப்படி தோற்
றும்? சுவையாக எப்படி தோற்
ஆமோ! நாமும் அந்த நாமரூபம் தோற்றமற்ற
ஏகரஸ ஆனந்த நிலையாவோம்!

# செய்யச் செய்ய!!!

துவைத **தோற்றம் மாறும்!** பின் **மறையும்!!**

இப்படி துவைத **பயம் அற்ற** நிச்சயத்தை,

செய்து, இங்கு, அதனுள் "**அகண்ட**

பிரம்மானந்தம்" என்னும், சமுத்திரத்தில்;

"**உப்பு**" என, கலந்து மயமாவாயாக!
எனமுடிக்கிறேன், எம் ரிபு மஹாத்மா!

இதுவரை கூறிவந்த ஸ்வய ஞானானுபவ நூல்களின்,
கருத்துரை! விளக்கவுரை! விரிவுரை! தெளிவுரை!
ரகஸ்யம்! மற்றும் அனேக "**ஸ்வயஞான பரமாம்ஸங்கள்!**"

சுவைத்துச் சுவைத்து! சுவைத்துச் சுவைத்து! சுவைத்துச் சுவைத்து!
சுவைத்துச் சுவைத்து! சுவைத்துச் சுவைத்து! சுவைத்துச் சுவைத்து!
சுவைத்துச் சுவைத்து! சுவைத்துச் சுவைத்து! சுவைத்துச் சுவைத்து!



மாறும் என்றால் :—
தோஷ குணங்கள் (139)
வலிமை குன்றி
மாறி ஸத்வ குணம் ஆகும்!
மாறயும் என்றால் அந்த
ஏகுணமும் நம்முள்ளேயே
மறைந்துவிடும்.

உது! குறைத்துச் குறை

"அதுவே" நீங்கள்! "நீங்களே" அது என!
அறிவிட்டீர்கள் என, ஆசி கூறி வாழ்த்தி இதை
நிறைவு செய்கிறேன்

— ஸ்ரீ பாபா.

"மாறும்" இவ் அனுபவம் எப்படி என்றால்?

(1) எண்ணம், சொல், செயல், அடங்கி இருக்கும்!

(2) வாக்கு குறைவாய் வரும்!

(3) கடின தடித்த வார்த்தை, குறைந்திருக்கும்!

(4) இறை குரு, உணர்வுடன், வாக்கு வரும்; ஆரம்ப நிலையாகும்!

(5) பேசும்போது, உடல் ஆட்டம், படபடப்பு, வேகம் குறைந்திருக்கும்!

(6) பிறர் வார்த்தையை, கேட்கும் போதும் மேலெழுந்த நிலையில் குறைந்திருக்கும்!

(7) எதிர் வார்த்தை, பேசுவது குறைந்திருக்கும்!

(8) எரிந்த வார்த்தை, நின்றிருக்கும்!

(9) உடனுக்குடன், வேகமாக பேசுவது, குறைந்திருக்கும்!

(10) பிறர் வார்த்தையை, குற்றமாக பாவித்து செய்வது, குறைந்திருக்கும்!

(11) பிறர் வார்த்தைக்கு, விட்டுக் கொடுக்கும் பழக்கம் ஆரம்பம் ஆகலாம்!



(140)

இ

விரோதம்! குரோதம்!
இவைகளால் பிறர்க்கு
**வஞ்சம்** நீர்க்கும், கொடும் செய்கை!

(12) பிறர்க்கு, செய்கையினாலோ! வாக்கினாலோ!
விரோதம் & குரோதம்! பாராட்டுவது குறைந்து
விரோதம் :- பேச்சால் வரும் கடும் வேதனை! வரவாம்!
குரோதம் :- செயலால் ,, ,, ,, !

(13) நாம் விரும்பவும் அவைகளை செய்ய வேண்டும் என்ற
பிறர் (தீய) (இதுவே வஞ்சம்) எண்ணம் குறையலாம்!

(14) தீமை வாக்காலோ, செயலாலோ, செய்திருந்தாலும்
அவர்களுக்கு, நன்மை செய்யும் எண்ணம் பெருகலாம்!

(15) எல்லாம் நலமே! எல்லாம் நலமே! எல்லாம் நலமே!
என்ற, சர்வார்ப்பணம், அனுஅனுவாக, பெருகலாம்!

**மறையும்** இவ்வனுபவம், எப்படி இருக்கும் என்றால்?

(1) எண்ணம், சொல், செயல் இம்மூன்றும் அனுப்
பிரமாணமும், தோன்றலில், சுகம் ஒன்றே தோன்றும்.

(2) வாக்கு, ஸ்ரீபகவான் செயல் என்ற உணர்வை
ஒட்டியே, ஆனந்தமாக வரும்!

(3) எந்நிலையிலும், எக்காலத்திலும், எவரிடத்திலும்,
தோஷவாக்கு அறவே வராது!

(4) இறை குரு உணர்வு வார்த்தை, எந்த வடிவிலும்,
குறையாது! மறையாது!



141

எதிர்! எரிந்த! வார்த்தை வராமல் இறை குரு உணர்வுடன் வார்த்தை வரும்போது நாம் ஓர் ஸ்பீக்கராக (ஒலி பெருக்கியாக) இருக்கும் நிலை ஸ்பஷ்டமாகவே உணர முடியும். அங்கு ஸ்ரீபகவான் கருணைய பிரத்யட்சமாக உணர முடியும்.

5 பேசும் போது, உடல் பரவசத்தால் மயிர்க்கூச்செறியும்.

கரும் அம்

6 பிறர் வார்த்தைகளை, கேட்கும் போது, நம் பொறுமையின் பாடம், இம்[படி] ஷ்பார்சுவியாக, நடத்துகிறான் ஸ்ரீபகவான் என, ஆனந்தம் பொங்கும்.

7 எதிர் வார்த்தை வராது. இனிமையான வார்த்தை வரும். அதுவும் நிலை கண்டு! இடம் கண்டு! அச் ஜீவ நிலை கண்டு! அமைதியாக வரும்!

8 எரிந்த வார்த்தையின், பொருள் தெரியாமல் அடியோடு நாசமாயிருக்கும்!

9 உடனேயுமில் வராது அப்படி வந்தாலும், [ஸ்ரீபகவான்] அவன் உள்ளிருந்து, உணர்த்துவதால், இருவருக்கும், ஒருமையாக இருக்கும்!

10 பிறர் வார்த்தையாக தோன்றுவது நமக்கு நம் அனுபவ பாடநிமித்தம், நம் குற்றம் குறைகளை, போக்க ஸ்ரீபகவான் நடத்தும், ஓர் நாடகம் என உணரும்!



(142)

விட்டுக் கொடுப்பது என்பது
குற்றத்தை நாம் ஏற்றுக்
கொள்ளும் நியாயமே.
இதனால்:- அஹங்கார,
அதிகார, ஆதிக்க, அபிமானம்
ஒரு சேர்ந்த வட்டமே வெட்கம்
ஆகிய இந்த எட்டும் நாசமாகும் அப்பொழுது நாம்
பொறுமையின் சிகரத்தில் ஆனந்தம் அடைவோம்
இது நான் இருந்து நாம் ஆகும் நிலை.

(11) மறுவார்த்தைகளும், செய்கைகளும், விட்டுக் கொடுப்பதால், நம் அஹங்காரமும், அபிமானமும் அழிவதைக் கண்டு, ஆனந்தம் அடையலாம்!

(12) ஸ்ரீபகவத் சொரூபமாக, உணர்வதால், பற்றுவரவு தீர்க்கப்படுகிறது என்ற, ஆனந்தத்தால், விரோத துரோகம், அடியோடு மறைந்து அன்பு ஸ்ரீபகவானை, உணரும், நிலை பெறலாம்!

(13) அன்பு ஸ்ரீபகவானுக்கு, அன்னியமாக நாமும், பிறரும், இல்லாததால், இயக்கம் உடனே மறையும்!

(14) பற்றுவரவு, தொடர்பிருந்தால், அங்கும் இங்கும், பாதிக்காமல், உனக்கு தோன்றாமல், அவன் ஸ்ரீபகவான் மாயாகாரியம் அதை நடத்தி முடித்துவிடும்!

(15) எல்லாம் நலமே! எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என ஆரம்பத்தில், எண்ணமும், சொல்லுமாக வெளிப்படும் உன் சாதனையால், எல்லாம் அவனை தன்மயமாக்கி எண்ணமும், சொல்லும், தோன்றாமல் ஆனந்தம் ஒன்றே தோன்றும்.



(143)

உறவு, சுற்றம், நட்பு இவைகள் முன்மடலில் கூறியபடி **அநித்ய பந்துவாக** மாறிவிடும். இது இந்த ஏழையின் அனுபவம்.

எம் ஆத்மானந்த குழந்தைகளே!

ஓர் உண்மை உரைக்கிறேம். கவனமாக கேண்மின்!

உடல், உலக, நாம, ரூப, பொருள்களும், உறவு சுற்றங்களும், தொழில், பணம், குடும்ப **பிணைப்புகளும்** உங்களுடைய, புண்ணிய பாப, கணக்கு சம்பந்தம், கொண்டதாகும். அது இயல்பாக நடக்கும் ஒன்றும். முன்பவமடல்களிலும், ஸத்சங்கத்திலும், சொன்னபடி **சர்வார்ப்பணத்தில்** ஸத்யமாகவே நீங்கள் விட்டு விட்டீர்களானால் அந்த நாமரூப **மயக்கமும் மறைய** சிரமங்களும், அவஸ்யம் தோன்றாது இருந்துவிடும். உங்களுக்கு, அவை இன்னமும், தோன்றுகிறதென்றால், சர்வார்ப்பணம், பூர்த்தி பெறவில்லை, என்று அறிக.

சர்வார்ப்பணம், பூர்த்தி பெற்று விட்டால், உங்கள் உறவு, சுற்றம், நட்பு, தொழில், பணம் பற்று வரவு, போக்கு வரவு, கொடுக்கல் வாங்கல், இவை அனைத்தும்,



(1144)

உ

காண்பவனாக இரு.
காட்சிப் பொருள் ஆகாதே
என்பது இங்கே பொருந்தும்
காண்பவன்:- ஆத்ம ஜோதி
காணும் பொருள்:- நாம ரூப ஜக ஜீவ தோற்றங்கள்

திரையிலோ, T.V.யிலோ, காணும் காட்சிகள், எப்படி அந்த வினாடியே, இது "பொய்" என்றும், நாம் காண்பவனாக இருக்கிறோமே தவிர, அக்காட்சி "நாமும் அல்ல நம்முடையதும் அல்ல!" என எப்படி ஸ்பஷ்டமாக உணர முடிகிறதோ அவ்வாறு உணர முடியும். அவரவர் வினையின்படி அக்காட்சியில் நடைபெறுபவை, திட்டமிட்ட காரியங்கள், என்றும் அறிவு, தொழில், கொடை இவை உண்மை அல்ல! நன்றாக நடிக்கிறார்கள் என, எப்படி உணர முடிகிறதோ, அப்படி உணர முடியும். அக்காட்சி T.V.யிலும் திரையிலும் ஓடுகிறது. இக்காட்சி நம் "மனத்திரை"யில் (எண்ண வண்ணமயில்) ஓடிக்கொண்டிருக்கிறது என்றும், உணர முடியும்! இக்காட்சியை நிறுத்தவும் (மாற்றி அமைக்கவும்) ஓர் உபாயம் உண்டு. அவ்வுபாயம்:- எல்லாம் நீயே எல்லாம் உன்னில்! எல்லாம் உனதே! என்ற சர்வார்ப்பணமாகவும், உணர்வு பூர்வமாகவும்,



(145)

ஓர் குறிப்பு:- உங்கள் உறவு, சுற்றம், நட்பு, இவைகளே நல்ல நடிகை! நல்ல நடிகர்! நம் அன்றாட பாடம் நிகழ்த்தும் வந்தவர்கள் என அவர்களை மானசீகமாக வணங்கவாகும்! இதுவே எனது அனுபவம்.

உள்ள உருக்கத்துடனும்!

கண்ணீர் பெருக்கத்துடனும்!

அமைந்தால், அவசியம் அக்காட்சிகள் மாறும்; மறையும் இது சத்தியம்!

மேலும் அக்காட்சி, சீராக கொடுப்பதாக இருக்குமேயானால் உங்கள், மன உருக்கம், சரியில்லை என உணர்க.

எப்படி TV யிலும், திரையிலும் நடைபெறும் காட்சியில், அதில் நடிப்பவர்களுக்கு, எப்படி இவர் நல்ல நடிகர் என்றும், இவள் நல்ல நடிகை என்றும் பட்டம் பெற்று, உங்கள் மதிப்பை, பெறுகிறார்களோ, அப்படி வாழ்க்கையில், நடைபெறும் அனைத்தையும், கண்டும் கேட்டும் "களிப்பு" அடைந்து, இது முடிந்த காட்சி இனி தொடராது என "கழித்து" விட்டால், மன பாரம் பெருகாது. அக்காட்சிகளை, "நப்பதை" காட்டியும் "தந்தி" வணங்குவது! மிக மிக மிக, நல்ல அனுபவத்தை கொடுக்கும்! இங்கு மனம் பணியவும், பொறுமையும், தேவை!





உணர்ச்சிகள் அழிந்தால் உணர்வு மேலோங்கும்! உணர்வு அழிவதில்லை. ஆகவே உணர்வுகள் மறையும் போது உணர்ச்சிகள் மேலோங்கும். உணர்ச்சிகள்:- ஆத்திரம் படபடப்பு துடி துடிப்பு! வெறி! உணர்வுகள்:- அமைதியின் ஆனந்தம்!

பின் உங்கள் அனுபவம், எப்படி இருக்கும் என்றால்?

(1) T.V. காட்சியோ! திரைக்காட்சியோ! போல், திட்டமிட்ட காரியங்களை! திட்டமிட்டபடி! அவரவர் வினையின்படி, டைரக்டர் (ஸ்ரீபகவான்) தம் மாயாவினால், ஒழுங்காக நடத்துகிறான். அதை அப்படியே ஏற்க வேண்டுமேயன்றி, மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ, முயற்சி செய்ய வேண்டாம் என்ற, உணர்வுடன், நாம் தலைவணங்கி, பணிவுடன் எல்லாம் நலமே, என்றால் நலமாய் முடியும்! நலமாக உணரமுடியும்! இந்நிலையில் கோபதாப வேக "உணர்ச்சிகள்" அடங்கி இருக்கும்! மன அசைவுகள் குறையும்!

(2) எங்கோ நடைபெறும், தெருச் சண்டை, சச்சரவுகளில் எப்படி கவனம், செலுத்தமாட்டோமோ, அதே நிலையில், பார்த்தும் பாராமலும், கேட்டும் கேளாமலும், அதில் ஆர்வம், கவனம், என்ற "சிரத்தை" அற்றுப் போகும்!




(147)

இனஜன, பேத நாமரூப பதுமைகளின் தோற்றம் ஆண் பெண் பேதம் தோன்ற காரணம்:- அவர்கள் கர்மாவை முடித்துக் கொண்டிருக்கிறார்கள்! நீயோ கர்மாவை முடித்து விட்டாய்! ஆகவே அங்கு அப்பொம்மைகளின் தரும்பும் இயக்கமும் பொருளற்றுப் போகும்.

(3) நம் முன் நடைபெறும், ஒவ்வொரு சம்பவங்களையும், காணும்போது, எந்த "தோஷ"மும், இல்லா நிலையில், அதை ஸ்ரீபகவான் நடத்துவதை, உணர்ந்து "ஆனந்திக்க" முடியும்.

(4) ஆண் பெண் மற்றும், "இன.ஜன.பேதம்" மறைந்து "பதுமைகளின்" கூட்டம் மட்டுமே நமக்கு சம்பந்தம் இல்லாமல், வந்து போவதும், ஒகே தோ, கொடுக்கல் வாங்கல், செய்வதும், அதன் விபரம் "கிரஹிக்கும்" ஆற்றல் இல்லாமல், (ஸ்ரீபகவானுக்கு) அந்நேரம், "அறிவாக" இருப்பதால்.

இத்தன்மை நிறையுற்று, பேதமற்று, விருப்பு வெறுப்பற்று "வெறுமை" தோன்றும்.



(148)

(5) இங்கு "மாயாவும் மனமும்"
(ஸ்ரீபகவானும் நானும்)
இணைந்து ஒன்றான தன்மையறிவே, நாம் ஸ்வயமாக,
"அறிவாகவே" இருக்கிறோம். ஆகவே இங்கு,
"ஜீவ கர்த்ருத்வம்" அழிந்த தன்மையறிவே,
அவித்தைக்கு, "மாயாவே" காரணம் என,
உணர்ந்த தன்மையறிவே, உறவு சுற்றம் நட்பு,
எந்த பிணைப்பும் இல்லாமல்,
"புதுமைகளின்" உள் இருப்பு
பூரண சைதன்யம் என, உணர முடியும்! புனித
இப்போது
வெறுமையாக தோன்றியது, வெறுமையும்!
"ஆனந்தம்" மாறி மாறி, தோன்றும்.
தோற்றம் என்றால், காட்சி அல்லவா! ஆனந்த
"சுவையின் உணர்வாகும்!"
இவ்வுணர்வானது, வெகு வெகு, ஆனந்தம் ஆகும்! இதை
சொல்லவோ, எழுதவோ, முடியாத ஒன்றாகும்!



P.T.O.

(149)

ஈசகர்த்ருத்வம்:— சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம்! இவைகளை நம் மாயாவால் செய்வதால் அம்மாயாவாலே நாம் செய்விப்பட்டாலும், அதை நாம் ஒரு காலமும் நாக்கால் சுட்டிக் காட்டிவிடோம். திரிகர்த்தரும் அதை ஏற்றே ஆக வேண்டும். காரணம்?

(6) இங்கு "ஈசகர்த்ருத்வம்" நாம் ஏற்காத் தன்மையாலும், அது நமக்கு தேவை இல்லாத் தன்மையாலும், "வல்லமைகள்" எதுவும், நம்மை சாராது. ஆனாலும், ஜீவத்தன்மையற்ற "ஜடமான" "உலகம்" மண்மயமாக இருந்தாலும், அதன் இரும்பு இயக்கத்திற்கான, தேவர்களையும், தேவகணங்களையும், சூட்சுமமாக உணர முடியும். அந்நிலையில், மனித இனத்தை, நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன முதலிய அனைத்து ஜீவ வர்க்கங்களும், தாவர வர்க்கங்களும், அவைகளின், இருப்பும், இயக்கமும் "உணர" முடியும். ஆனால் நமக்கு அன்னியமாய் தோன்றும். அதுவும் நாமாகவே உணர முடியும். இது "பேராவின்" நியாயம்.



(150)

இ கர்த்தாக்களின் நிழலே மாயா வாக இருப்பதாலும், சுதாரூபமாக சத்தியர்க தெரிப்பிருப்பதாலும், ஸதி/சதி செய்கிறதென்று உபசாரமாக ஸ்ரீமகான்கள் சொல்லக் கேள்விப்படுகிறோம். ஈசனும் மாயாவும் ஒரே இடையில் ஊறிப்போன இருமட்டைகள் தானே என்கிறார்கள்.

சென்றபக்கம் தொடர்ச்சி

(7) இப்பேரறிவின், நிலை அனுபவமான, மறு கூறுணைக் கோடானு கோடி அண்டங்களும், சூரிய சந்திராதி "அனைத்தும்"! நாமம் உண்டு! ரூபம் இல்லை!!

நாமம்:— அகண்டாகார "பேரானி"

ரூபம்:— எத்தோற்றமும் இல்லாமல், சொல்லமுடியாத, விளக்கமுடியாத "சுவை" என்ற உணர்வு, மயமான "ஆனந்தம் ஒன்றே"! உணரமுடியும்!

அறிவு:— ஈசன் நிலை என்ற, ஸ்ரீ பகவத் (பரமாத்ம) சொரூபம்!

பேரறிவு:— ஞானானுபவம் என்ற, பிரம்மானந்த மயம்!!

மேலே கூறிய, இவ்வனுபவங்களை, பெறுவது எங்ஙனம்? நாமரூப சம்பந்தம் கொண்ட, ஜக ஜீவ தோற்றம் அனைத்தும், பரம் என்ற மண்ணே! மண் என்ற பரமே! மண்ணுக்கு (பரத்திற்கு) அன்னியம் எதுவும் இல்லை! அதுவே நாம்! நாமே அது! என்ற உணர்வை பெற, இருப்பது ஒன்றே! நடப்பது நலமே! என்ற உணர்வை முதலில் பெற வேண்டும்! எல்லோரும் பெற வாழ்த்துகிறேன்! எல்லாம் ஒன்றே! அது நலமே! அதுவாகவே அதுவாயிருங்கள்! இது ஸத்தியம்!

பாபா



உ

# உதகையில் நடந்த ஓர் சிறிய சம்பவம்!!!

ஓர் சமயம், வாக்கிங் சென்று கொண்டிருக்கும் போது, ஓர் மாடு அதிகப்படியாகவே "சாணம்" போட்டிருந்தது. இரண்டு தினங்களில், அந்த சாணத்தில், சாணப் புழுக்கள் அனேகம் நெளிந்தன. நம் ஊரில், மண்புழு போன்ற ஓர் சிறிய பாம்பு, ஒரு சாண் நீளம் இருக்குமாம். அச்சாணத்தின் அருகே, பருத்த வண்ணம், அச்சாணப்புழுக்களை, ஒவ்வொன்றாக, நவதானியம் பொறுக்கும், பறவையைப் போல ஒவ்வொன்றாக உண்டு கொண்டிருந்தது! அப்புழுக்களில் ஒன்றிரண்டு மட்டும் நெளிந்து நெளிந்து அருகில் உள்ள புல்லின் அடியில், மறைந்தன போலும்? அப்புழுக்களில் சில, இந்த ஏழைப்பைத்தியத்தைக் கண்டு கொண்டது, "அதன் பூர்வபுண்ணியத்தால்."

அதில் ஒன்று:- ஹே பாபா! பாபா! எங்கள் நிலைமையைப் பார்த்தாயா? இக்கொடிய சர்ப்பமும், எங்கள் இனத்தையே, ஒவ்வொன்றாக, கபளீகரம் செய்து கொண்டிருக்கிறது. (உண்டு கொண்டிருக்கிறது) அதை விரட்டியோ! அடித்துக் கொன்றோ! எங்களை காப்பாற்ற மாட்டாயா?

பைத்தியம்:- ஹே புண்ணிய புழுக்களே! இதை எப்படி, யாம் செய்ய முடியும்? மனித இனத்தைத் தவிர, நடப்பன, பறப்பன, ஊர்வன, நீந்துவன! இவை



உ

(152)

அனைத்து ஜீவ வர்க்கங்களும், "ஒன்றுக்கு ஒன்று" உணவாக வேண்டும். இதுவே "விதி"! இதுவே இயற்கையின் (இறைவனின்) "நியதி"! ஒன்றை கவனிக்கவும், எந்த காலங்களிலும் "பறவை" இனங்களோ! "மிருக" இனங்களோ! "இயற்கையின்" நியதியால் (வியாதியோ, வயோதிகமோ) வந்து மரணம் எய்தியதும் இல்லை! எய்தப் போவதும் இல்லை! முன்யாம் கூறிய நியதியால் ஒன்றுக்கொன்று ஆகாரமாகி மறைந்து, அவைகளின் "சஞ்சிதகர்மாவால்" அதனதன் கர்மாவுக்கு ஏற்ப மறுபிறவியெடுத்தே ஆக வேண்டும். இதுவே நியதி. (ஆனால் வீட்டில் (நாட்டில்) வாழும், பறவை விலங்குகளுக்கு) மேலே சொன்ன, இயற்கையின் நியதி இல்லை! அவைகளுக்கு, இந்த "மனம்" படைத்த "மனிதனே" காரணமாக, அமைய வேண்டும் என்பதே நியதி!



மற்றொருபெண்:- எங்களுக்கு இப்படி ஓர் நிலைமை வரக்காரணம் என்ன? நாங்கள் முற்பிறப்பில் என்ன பாவம் செய்தோம்?

வைத்தியம்:- நீங்கள் அனைவரும், முற்பிறவியில் "எறும்பு" இனமாக இருந்தீர்கள். அது சமயம், இந்த சரீரம் ஓர் மலம் உருட்டும் வண்டாக இருந்தது!

அந்த வண்டானது தன் உணவான சாணம் (மலம்) உருட்டி திரட்டிக் கொண்டிருந்தபோது அருகில் எறும்புக்கூட்டமாகிய உங்கள் வாசஸ்தலம் இருந்தது! அப்போது! நீங்கள் அனைவரும் அந்த வண்டை உணவாக்கிக் கொண்டீர்கள். அதே வண்டு, இப்போது சரீரமாக வந்து,

"அன்று தன்ன" உண்டவைகளையே. "இன்று அது" உண்டு கொண்டிருக்கிறது!

இப்போது சொல்லுங்கள். அது உங்களை உண்பது தவறு? (உலகமே ஓர் கணக்கு தீர்க்கும் மையம்) சரியா?

நீ கொன்றன அனைத்தும், அனைத்தும் உன்னைக் கொன்றன! நீ தின்றன அனைத்தும், அனைத்தும் உன்னைத் தின்றன! இதுவே நீதி! இதுவே நியதி! ஆகவே பணிவோடு ஏற்றுக் கொள்ளுங்கள்!



உ

(௧௫௪)

மற்றோர் பக்தர் :— ஓ எம் அன்பே உருவான பாபாவே! உன் பாதத்தை நாங்கள் அனைவரும் தலை வணங்கி ஏற்றுக் கொண்டிருக்கிறோம்! ஆனாலும், எங்களுக்கு ஒரு "வரம்!" வேண்டும்!

வைத்தியம் :— வரமா? அதை கொடுக்க, எமக்கு தகுதி இல்லையே! வரம் கொடுப்பவனிடம், கேட்க வேண்டும்! அது கிடைக்கும்!

ஒரு பக்தர் :— இந்த "பூர்வ விருத்தாந்தம்" தெரிந்த உமக்கு வரம் கொடுப்பது ஒன்றும் பெரிய காரியமில்லை! (உங்கள் விருத்தாந்தத்தை)

வைத்தியம் :— அதை யாரும் சொல்லவில்லை. அதைச் சொன்னவன், இயக்கும் மறை பொருளாக இருக்கிறது. "அவன்" வருவான். அவனிடம் கேளுங்கள். அவன் அவசியம் வருவான்! (அவன் வந்தான்)

கண்ணன் :— ஹே அன்பான பக்தர்களே! அவன் தர முடியாது! அவன் தரமாட்டான்! உங்களுக்கு என்ன வரம் வேண்டும், சொல்லுங்கள்?"

பக்தர்கள் :— ஹே பிரபோ! "பிறரை கொல்லாமையும்! பிறரால் கொல்லப்படாமையும்" உள்ள, பிறவி வேண்டும்!

கண்ணன் :— "ததாஸ்து" என்றான்!

அவர்கள் எந்த எண்ணத்தில், என்ன வரம் கேட்டனரோ! அவன் என்ன வரம் கொடுத்தானோ? அப்படி ஒன்றை கொல்லாமையும், பிறரால் கொல்லப்படாமையும், உள்ள "ஜீவன்" எது? அதை அவனும் அவை களும்தான், அறிவர்! இந்த ஏழை பரதேசி அறியாது!

(கையொப்பம்) பாபா




Abode of Love

You Are Everything!